தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 19, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 ஜூலை 3, புதன்கிழமை

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தலைமையில் 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.''

இந்தத் தொழிலை இக்கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு, அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

(குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

1. உறுப்பினர் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): மாண்புமிகு அமைச்சர்களே, அங்கத்தினர்களே, இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். யாராவது இருக்கிறார்களா? ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. யாரும் இல்லையே!

2. பேரவைத் தலைவர் தேர்தல் :

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): அடுத்து பேரவையின் இன்றைய அலுவல் 'அரசமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவை தலைவர் தேர்தல்' ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர்களின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதிகளின், 7-வது விதி, உள்விதி (4)-ன்படி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 19, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 ஜூலை 3, புதன்கிழமை

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தலைமையில் 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):

'' இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.''

இந்தத் தொழிலை இக்கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு, அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

(குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

1. உறுப்பினர் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) : மாண்புமிகு அமைச்சர்களே, அங்கத்தினர்களே, இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். யாராவது இருக்கிறார்களா? ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. யாரும் இல்லையே!

2. பேரவைத் தலைவர் தேர்தல் :

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): அடுத்து பேரவையின் இன்றைய அலுவல் 'அரசமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவை தலைவர் தேர்தல்' ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர்களின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதிகளின், 7-வது விதி, உள்விதி (4)-ன்படி

பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள், முன்மொழிந்தவர்கள், அதை வழிமொழிந்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டும்.

அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப் பெற்றவர்: திரு. இரா. முத்தையா அவர்கள்.

முன்மொழிந்தவர்: மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர், இந்த உலகமெல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கக்கூடிய அருமைத் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள்.

வழி மொழிந்தவர்: மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், திரு. இரா. முத்தையா அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நேரத்திலே, சட்டமன்றத்தில் மிக்க அனுபவம் வாய்ந்த அருமைத் தம்பி திரு. இரா. முத்தையா அவர்கள், பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நான் மீண்டும் மாண்புமிகு முதல்வரவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துடன் என்னுடைய அலுவல் முடிகிறது. இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. இரா. முத்தையா அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்ந்தெடுக்கப்படுகின்ற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று, பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும்.

எனவே, பேரவைத் தலைவரவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், ஆளுங்கட்சிக்கு அடுத்து, பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் இந்திய தேசியக் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.

1991 ஜூலை 3]  [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்வதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர், இருக்கையில் அமர்ந்தபின் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை அவை முன்னவர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ஆளுங் கட்சிக்கு அடுத்து பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் இந்திய தேசியக் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி.)

10–05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனும் குறள் நெறி கூறி, என் அலுவலைத் தொடங்குகிறேன்.

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், "பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்" ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத்தாள்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. பேரவையின் விதி 8, உள்விதி (2)-இன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன். அதன் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர்: பேராசிரியர் க. பொன்னுசாமி

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.

வழிமொழிந்தவர் ; மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்

1991 ஜூலை 3] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்வதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர், இருக்கையில் அமர்ந்தபின் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை அவை முன்னவர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ஆளுங் கட்சிக்கு அடுத்து பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் இந்திய தேசியக் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி.)

10–05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனும் குறள் நெறி கூறி, என் அலுவலைத் தொடங்குகிறேன்.

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், "பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்" ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத்தாள்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. பேரவையின் விதி 8, உள்விதி (2)-இன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன். அதன் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | : | பேராசிரியர் க. பொன்னுசாமி |
| முன்மொழிந்தவர் | : | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. |
| வழிமொழிந்தவர் | ; | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். |

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்

கிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

### 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராட்டுகள் வழங்குதல் மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழம்பெரும் பெருமையும், புகழும் கொண்ட இந்தப் பத்தாவது பேரவைக்கு, தாங்கள் இந்த அவையின் சார்பாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும், மாண்புமிகு துணைத் தலைவராகப் பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும் இந்த அவையினர் பூரிப்பும், பெருமையும் கொள்கிறார்கள் என்பதை நான் தங்களுக்கும், பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பேரவையின் சார்பாக, ஒருமனதாக, தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, மிக மிகப் பாராட்டுதற்குரிய ஒன்றாகும். தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் மனமுவந்து முன்வந்து நின்று, அவர்களுடைய பேராதரவையும், பெரு ஒத்துழைப்பையும் நல்கி, நல்லதொரு மரபு இந்த மன்றத்திலே நிலைபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, அதற்கு நல்லாதரவு தந்திருப்பதற்காக, ஆளுங்கட்சியின் சார்பாக, அவைமுன்னவர் என்ற முறையில், எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேர்களுக்கும் நான் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பேரவையினுடைய தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிற தாங்கள், இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கான எல்லாத் தகுதிகளையும், திறமைகளையும் ஒருங்கே பெற்றிருக்கிறீர்கள் என்பதை இந்த அவையினர் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

தாங்கள் மூன்றுமுறை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றிருக்கிறீர்கள். 1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் மூலம், இந்தச் சபையிலே இடம் பெற்று, நற்பணிகள் பலவற்றையும் ஆற்றியிருக்கிறீர்கள். அதைப்போன்றே, 1989-ஆவது ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே சிறப்பானதொரு வெற்றியைப் பெற்று, பாராளுமன்றத்தினுடைய கட்சித் தலைவராகவும் வீற்றிருந்து, அரும்பணிகள் பலவற்றை

கிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

### 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராட்டுகள் வழங்குதல் மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழம்பெரும் பெருமையும், புகழும் கொண்ட இந்தப் பத்தாவது பேரவைக்கு, தாங்கள் இந்த அவையின் சார்பாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும், மாண்புமிகு துணைத் தலைவராகப் பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும் இந்த அவையினர் பூரிப்பும், பெருமையும் கொள்கிறார்கள் என்பதை நான் தங்களுக்கும், பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பேரவையின் சார்பாக, ஒருமனதாக, தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, மிக மிகப் பாராட்டுதற்குரிய ஒன்றாகும். தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் மனமுவந்து முன்வந்து நின்று, அவர்களுடைய பேராதரவையும், பெரு ஒத்துழைப்பையும் நல்கி, நல்லதொரு மரபு இந்த மன்றத்திலே நிலைபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, அதற்கு நல்லாதரவு தந்திருப்பதற்காக, ஆளுங்கட்சியின் சார்பாக, அவைமுன்னவர் என்ற முறையில், எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேர்களுக்கும் நான் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பேரவையினுடைய தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிற தாங்கள், இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கான எல்லாத் தகுதிகளையும், திறமைகளையும் ஒருங்கே பெற்றிருக்கிறீர்கள் என்பதை இந்த அவையினர் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

தாங்கள் மூன்றுமுறை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றிருக்கிறீர்கள். 1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் மூலம், இந்தச் சபையிலே இடம் பெற்று, நற்பணிகள் பலவற்றையும் ஆற்றியிருக்கிறீர்கள். அதைப்போன்றே, 1989-ஆவது ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே சிறப்பானதொரு வெற்றியைப் பெற்று, பாராளுமன்றத்தினுடைய கட்சித் தலைவராகவும் வீற்றிருந்து, அரும்பணிகள் பலவற்றை

யும் புரிந்திருக்கிறீர்கள் என்பதையும் இந்த அவையினர் நன்கு உணர்வார்கள். அந்த வகையிலே, இந்த அவையினுடைய பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கான அளவுக்கு, தங்களுக்கு மிகுந்த அனுபவம் இருக்கிறது. இந்த மன்றத்தினுடைய பாங்குகளையெல்லாம் நன்கு தெரிந்து வைத்திருக்கிற தாங்கள், இந்தப் பேரவையினுடைய தலைவராக ஆகியிருப்பது, எங்களுக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாகும். இந்தத் தலைவர் பதவியைத் தாங்குவதற்கான எல்லாவிதத் தகுதியும், திறமையும், அறிவுத் திறனும், ஆற்றல் திறனும், பண்பாட்டுத் திறனும், செயலாற்றும் திறனும், செய்துமுடிக்கின்ற திறனும், தங்களிடத்திலே ஒருங்கே அமைந்திருக்கின்றன என்பதையும் அனைவரும் நன்கு உணர்வார்கள். தாங்கள், மாணவப் பருவ காலத்திலிருந்தே, தங்களை அரசியலுக்கு ஒப்படைத்து, தங்களுடைய நேரத்தையும், நினைவையும் இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும், சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கும். மக்களுடைய ஒருமைப்பாட்டிற்கும் பயன்படுத்தி வந்திருக்கிறீர்கள் என்ற வரலாறு எல்லோருக்கும் பூரிப்பையும், பெருமையையும் தருகிற ஒன்றாகும். மாணவப் பருவ காலத்திலேயே அரசியலிலே நேரடியாக ஈடுபட்டிருந்து, தாங்கள் கொண்டிருந்த திராவிடர் இயக்கத்தினுடைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும், கருத்துக்களையும், நிலைப்படுத்துவதற்கும்,அதனுடைய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பதற்கும், தங்களுடைய நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும், ஊக்கத்தையும் சிறப்பாகப் பயன்படுத்தி வந்திருக்கிறீர்கள் என்பது மட்டுமல்லாமல் தொடர்ந்து இருந்து பாடுபடுகின்ற பண்பட்ட உள்ளத்தையும் தாங்கள் மிகச் சிறப்பாகப் பெற்றிருக்கிறீர்கள்.

10-10 மணி

தொடர்ந்து பணியாற்றி வந்தது மட்டுமல்லாமல், பேரறிஞர் அண்ணா அவர்களுடன் இணைந்து நின்று, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடனும் இணைந்து நின்று, இப்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடனும் இணைந்து நின்று பணியாற்றுகின்ற அளவுக்குச் செம்மையான பாங்குகள் பலபெற்று, அரசியலில் ஈடுபாடு கொண்டு, பெயரையும், புகழையும் பெற்றிருக்கிற தாங்கள், இந்தப் பேரவையினுடைய தலைவராக வந்திருப்பது எல்லா வகைகளிலும் மிக மிகச் சிறப்பாக அமைந்த ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல. தங்களுடைய சீரிய தலைமையின்கீழ் இந்த அவை நாளடைவில் பொலிவு பெறும், நல்ல வலிவு பெறும் என்ற நம்பிக்கை இந்த அவையிலே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் உண்டு. அதன்மூலமாக இந்த அவை பெறக்கூடிய

அத்தகைய புகழும் பெருமையும் மற்றவர்கள் பாராட்டத்தக்க அளவுக்கும், வியக்கத்தக்க அளவுக்கும் அமையும் என்ற நம்பிக்கையும் எல்லோருக்கும் இருக்கிறது.

''மதியின்கண் மரு'' இருப்பது போல பாரம்பரியமிக்க பல ஆன்றோர்களும் சான்றோர்களும் இருந்து வழிநடத்திச் சென்ற இந்தப் பேரவை, இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களில் அமைந்திருக்கிற பேரவைகளுக்கு எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாகவும் இருக்கத் தக்க அளவிலே இருந்த இந்த அவையிலே சிலபல நேரங்களிலே வேண்டத்தகாத வகையில் நெறி முறை கடந்த தன்மையில், சில அசம்பவங்கள் நடைபெற்றிருப்பது ''நிலவின்கண் மரு அமைந்திருப்பது போன்று'' இந்த அவையிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருப்பது நம் அத்தனை பேர்களுக்கும் வருத்தத்தையும், வேதனையையும் வாட்டத்தையும் தரக்கூடிய செயல்கள்தான். என்றாலும் கூட அவை எல்லாம் நடந்தவையாக இருக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய விருப்பம். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் எல்லாம் நல்லவைகளாக அமையட்டும் என்ற உறுதியான உள்ளத்தோடு இந்த அவையிலே இருக்கிற அத்தனை பேர்களும் பணியாற்றிச் செல்வோமேயானால், இந்த அவை தன்னுடைய பணிகளைச் சிறப்பாகவும் செம்மையாகவும் நடத்தி முடிப்பதற்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுடைய பாராட்டுதல்களையும் போற்றுதல்களையும் பெறுவதற்கும் வாய்ப்பு உள்ளதாக அமையும். அந்த வகையிலே கட்சிக்குள்ளே பணியாற்றக் கூடிய தாங்கள் இதுவரையில் ஒரு குறிப்பிட்ட கட்சியிலே பொறுப் பேற்று, அந்தக் கட்சியின் கடமைகளை ஆற்றுகின்ற தன்மையில் இருந்திருந்தாலும், இன்றிலிருந்து நீங்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டிருந்து. இந்த அவையிலே இருக்கிற மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிற பல்வேறு கட்சிகளையும் ஒன்றாக மதித்து பொதுப்படையாக இருந்து பணியாற்ற வேண்டிய நிலைக்கு ஆளாகி இருக்கிறீர்கள்.

இந்த அவை தங்களைப் பெற்றதன் மூலம் புகழ் பெற்றாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை இழந்திருக்கிறது என்றாலும், இந்த அவை உங்களைப் பெற்றிருக்கிறது என்பதிலே நாங்கள் எல்லாம் பெருமைப்படுகிறோம். அது மட்டுமல்ல. இந்த அவை பல ஆன்றோர்கள், சான்றோர்கள் இருந்து நடத்தி, புகழ் பெற்றதாகவும் பெருமை பெற்றதாகவும் திகழ்ந்து, மற்றவர்களுடைய பாராட்டுதல்களையும் பெற்றிருந்த பாங்கிற்கு ஏற்ப தாங்களும் வழி நடத்திச் செல்வீர்கள் என்கின்ற உறுதிப்பாடு எங்களுக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த அவையினுடைய உரிமையை, அவையில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பாற்ற வேண்டிய காவலராகவும் நீங்கள் திகழ்கிறீர்கள்.

அது மட்டுமல்ல. இந்த அவையினுடைய விதிமுறைகளை எல்லாம் நெறிப்படுத்திச் செல்கிற நெறியாளராகவும் தாங்கள் விளங்குகிறீர்கள். அவ்வப்போது ஏற்படுகிற பிரச்சினைகளைப் பொறுத்தும், குறிப்பாக ஒழுங்குப் பிரச்சினையைப் பொறுத்தும், உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தும் வேறு பல எதிர்பாராத வகையிலே வந்து சேருகின்ற பிரச்சினைகளைப் பொறுத்தும் உடனுக்குடன் தீர்ப்பு வழங்க வேண்டிய நீதிபதியாகவும் தாங்கள் திகழ்கிறீர்கள்.

அது மட்டுமல்ல. விதிமுறைகளுக்கு மாறாகக் குற்றங்கள் இழைப்பவராக இருப்பவர்களைத் தண்டிக்க வேண்டிய ஆண்டகையாளராகவும் நீங்கள் இருக்கிறீர்கள். அது மட்டுமல்லாமல், இரு சாராரையும் ஒப்ப நோக்கி, நீங்கள் இங்கே பணியாற்ற வேண்டிய கடப்பாடு உடையவராகவும் இருக்கிறீர்கள்.

> ''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
> கோடாமை சான்றோர்க் கணி''

என்று வள்ளுவப் பெருந்தகையாளர் கூறியதற்கிணங்க—அதற்கு பரிமேலழகர் உரை எழுதும்பொழுது மிக அழகுபட எழுதுகிறார். முதலிலே தராசு தன்னைச் சமன்படுத்திக்கொண்டு பிறகு எடை போட்டுப் பார்க்கவேண்டும். அதனால்தான் சமன் செய்த பிறகு சீர் தூக்கும் துலாக்கோல் போல் என்று அழகுபட அதற்கு அவர் உரை எழுதுகிறார்—அதற்கேற்ப முதலிலே உங்களைச் சமநிலையில் நீங்கள் வைத்துக்கொண்ட பிறகு, ஏற்படுகிற பிரச்சினைகளை ஒப்ப நோக்கி, தீர்ப்பளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. அதுவும் இந்தக் காலத்தில் அவைத் தலைவராக வருவது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. சிலபல ஆண்டுகளுக்கு முன் தலைவராக வரவேண்டும் என்று விரும்பியவர்கள் பலபேர் உண்டு. ஆனால், இந்தியாவிலே— நாடாளுமன்றத்திலேயும் சரி, பல்வேறு சட்டமன்றங்களிலேயும் சரி நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அவைத் தலைவர் பதவி என்றாலே ஓடுகிற அளவுக்குத்தான் பலபேர் இருக்கிறார்களே தவிர, அந்த இடத்திலே வந்து உட்கார்ந்து அமைதியாக நடத்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

10-15 மணி

ஆக, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஆரம்பத்தில் இருந்த கட்டம் தான் இப்போது முடிவிலே நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1237, 1258 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற '' மாக் பார்லியமென்ட் '' என்றெல்லாம் சொல்லப்படுகிற பாராளுமன்றங்களில்தான் அப்படி நடைபெற்றது.

அப்போதெல்லாம் '' ஸ்பீக்கர் '' என்பவர் பேசுபவராகத்தான் இருந்தார். அவையை நடத்துகிற அதிகாரம் அப்போது ஸ்பீக்கருக்குக் கிடையாது. அப்போது பிரிட்டனிலே அரசன் ஒரு பக்கமும், பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் இன்னொரு பக்கமும் இருப்பார்கள். அரசனுடைய முடிவை பாராளுமன்றத்திற்கு வந்து சொல்லவேண்டிய பொறுப்பும், '' பாராளுமன்றத்தினுடைய தீர்மானம் இது என்று நீ அரசனுக்குப் போய்ச் சொல்ல வேண்டும் '' என்கின்ற பொறுப்பும் ஸ்பீக்கருக்கு உண்டு. அரசன், இன்னதைச் செய்து தீரவேண்டும் என்று கட்டளையிட்டு அனுப்புவான். அது முடியாது, இதுதான் என்று '' ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் '' தீர்மானம் செய்து அனுப்பும். இடையிலே மாட்டிக்கொண்டு விழிப்பவர்தான் ஸ்பீக்கராக இருப்பார். (சிரிப்பு) இதையெல்லாம் சொல்ல முடியாமல் போய்ச் சொல்கிறபோது, அரசனுக்கு அளவுக்கு மீறிய சினம் பொங்கும். அதனால் சிலபல சபாநாயகர்களைச் சிறையிலே கூட அடைத்திருக்கிறார்கள்; ஒரு சில சபாநாயகர்கள் கொலை தண்டனை கூடப் பெற்றிருக்கிறார்கள். ''நான் சொன்னதைப் போய் நிறைவேற்றாமல் ஏன் வந்தாய், எனவே நீ ஸ்பீக்கராக இருப்பதற்கு லாயக்கு இல்லை '' என்று சொல்லி, சிரச்சேதம் கூடச் செய்திருக்கிறார்கள். அதற்காகத்தான் என்ன செய்வார்கள் என்றால் எல்லோரும் ஒன்றாகக் கூடி, கலந்து பேசி ஏகமனதாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அப்படித் தேர்ந்தெடுத்தவுடனே அந்த 'ஸ்பீக்கர்' ஓட முயல்வாராம். அதற்காகத்தான் ஆளும் கட்சித் தரப்பினரும், எதிர்க்கட்சித் தரப்பினரும் அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, இழுத்துக் கொண்டு வந்து நாற்காலியில் உட்கார வைப்பார்கள். (சிரிப்பு) அதைத்தான் நானும், திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும் இங்கே செய்தோம்.

அப்போது அவசியமாக இருந்த ஒரு முறை இப்போது சடங்காக மாறி இருக்கிறது. அவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் சேர்ந்து அழைத்துக் கொண்டுபோய் உட்கார வைப்பது எதற்காக என்று புரியாமல் கூட பலபேருக்கு இருக்கும். ஏன், அவராகப் போய் உட்காரத் தெரியாதா, இவர்கள்தான் போய்க் கூட்டிக்கொண்டு வந்து உட்கார வைக்க வேண்டுமா என்று கருதக் கூடும். அந்த மரபு பிரிட்டிஷ் மரபை ஒட்டி வருகிற ஒன்று. என்றாலும் கூட இதையெல்லாம் சமாளிக்கிற திறமை தங்களிடத்திலே உண்டு; இந்த அவையிலே விவாதங்கள் வரக்கூடும்; விவாதங்களுக்கு இடம் தரவேண்டும். '' ஹெல்தி அட்மாஸ்ஃபியர் '' என்று கூறுவார்கள். ஒரு சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக விவாதங்கள் இருக்க வேண்டும். "The Ruling Party has its way; the Opposition Party has its say"

என்பார்கள். ஆக, எதையும் எடுத்துச் செய்யக்கூடிய அத்தகைய முழு உரிமையை ஆளும் கட்சி படைத்திருந்தாலும் குற்றங் குறைகளையும், மற்றவற்றையும் எடுத்துச் சொல்கிற முழு உரிமையும் எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. அப்படி எடுத்துச் சொன்னால் தான் நாட்டினுடைய நிலைமைகளும், மற்றவைகளும் இந்த அவைக்கும் தெரியும்; எங்கெங்கு என்னென்ன குற்றங்கள் நிகழ்கின்றன என்று ஆட்சியிலே இருப்பவர்களுக்கு நேரடியாகப் புரியாமல் இருக்கலாம். அவற்றை எல்லாம் கவனத்திற்குக் கொண்டு வந்து எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு அவையிலே இருக்கிற உறுப்பினர்களுடைய கடமைதான். அப்படிக் கொண்டு வருவது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொலைக்காட்சியில் பேசுகிறபோது மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சியினுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று நாங்கள் கணக்கிட்டுக்கொள்ளமாட்டோம். ஆனால், எதிர்க்கட்சிகள் எடுத்துச் சொல்கிற நல்ல கருத்துக்கள் என்ன என்பதைத்தான் நாங்கள் கவனிப்போம் என்று அவர்கள் தொலைக்காட்சியில் பேசுகிறபோது கூட குறிப்பிட்டார்கள். ஆக, அந்த அணுகுமுறையில்தான் ஆளும் கட்சி, இந்த அவை நடத்திச் செல்லப்பட வேண்டும் என்று விரும்புகிறது.

காரசாரமான விவாதம் ஏற்படுகிறபோது சூடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும், அந்தச் சூட்டை ஒளியாக மாற்றி ஒளிவீச வேண்டிய அளவுக்கு ஆக்கவேண்டிய பொறுப்பும் அவைத்தலைவராக இருக்கிற தங்களைத்தான் முழுமையாகச் சார்ந்ததாக இருக்கும். ஆகவே தங்களுடைய பொறுப்பு அதிகம்தான். இந்த அவையைக் கட்டுப்படுத்திச் செல்ல வேண்டியது, ஒழுங்கு முறைகளை முறைப்படுத்திச் செல்ல வேண்டியது ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவ்வப்போது உடனுக்குடன் இருந்து செய்ய வேண்டிய பெரும் பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது.

எனவே, உறுப்பினர்களுக்கு எல்லாம் இல்லாத பொறுமை உங்களுக்கு, அதாவது அவைத்தலைவருக்கு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இனிமேலாவது கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக்கொள்கிற அளவுக்கு சூழ்நிலைகள் உருவாக்கினாலும் உருவாக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே பொறுமையோடு எல்லாப் பணிகளையும் கவனிக்க வேண்டிய பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. காரசாரமான நிகழ்ச்சி வருகிறபோது தங்களுடைய நகைச்சுவையான சிலபல குறிப்புகள்தான் அதைக் கட்டுப்படுத்த முடியுமே தவிர, வேறு எதுவும் இருக்க முடியாது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 ஜூலை 3

இப்படி பல சிறந்த பண்புகளுக்கு எடுத்துக் காட்டாகத் தான் ஒரு அவைத் தலைவர் இருந்து தீர வேண்டுமென்கின்ற நிலை இருக்கிறது. அந்த வகையிலே சாதாரணமாக தலைவர்கள் 'work like a horse and live like a hermit' என்பார்கள். 'புரவி போல வேலை செய்ய வேண்டும், துறவி போல வாழ வேண்டுமென்பார்கள்'. அதே மாதிரிதான் புரவி போல வேலை செய்ய வேண்டி வரும், துறவி போல வாழ வேண்டி வரும். எந்தக் கட்சியையும் சேராமல் இருந்து, துறந்து வாழ வேண்டிய துறவியாக இருக்க வேண்டிய கடப்பாடு உள்ளவராக இருக்கிறீர்கள். அந்த வகையிலே தான், அவற்றை எடுத்துச் செய்கின்ற செயல் ஆற்றல் திறமையைக் கொண்டிருக்கின்ற தங்கள் சீரிய தலைமையின் கீழே இந்த அவை அதனுடைய பணிகளை மிகச் சிறப்பாகச் செய்யும். இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களுடைய மனம் மகிழத்தக்க அளவுக்கு நிலைமைகள் நடைபெறும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் உண்டு.

10-20 மணி

அதைப் போன்றே துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்ற பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் நீண்ட பெருங்காலமாக, மாணவப் பருவ காலத்திலேயிருந்து இயக்கக் கொள்கைகள் இடத்திலே நீங்காப் பற்றும், தணியாத ஆர்வமும் கொண்டு அவற்றினுடைய வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்து வந்து இருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல், பேராசிரியர் பணியாற்றிக் கொண்டிருக்கின்றபோதே பல முறை அவரைச் சந்தித்த வாய்ப்பு எனக்குண்டு. அப்போதெல்லாம் கூட ஊக்கத்தோடும், கொள்கைப் பற்றோடும் பணியாற்று கின்ற அத்தகைய தன்மை அவர்களிடத்திலே இருந்ததை நான் பார்த்திருக்கிறேன். அந்த அளவுக்கு, பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பணியாற்றி எல்லோருடைய அன்பையும், அரவணைப்பையும், எல்லோருடைய நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்ற மாண்புமிகு பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் துணைத் தலைவராக ஒருமனதாக இன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதும் நமக்கு மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

1989-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மருங்காபுரி தொகுதியிலிருந்து வெற்றி பெற்று, இந்த அவையிலே வந்திருந்து பணியாற்றியிருப்பதன் காரணமாக, இந்த அவையினுடைய நடைமுறைகள், மற்றவைகள் எல்லாம் நன்கு அறிந்தவர்தான் இன்றைக்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் நமக்கெல்லாம் மகிழ்ச்சிக்குரிய ஒன்று. 'பட்டிமன்றம் பாங்கறிந்து ஏறினும்' என்றார் இளங்கோவடிகள். ஆக விவாதிக்கின்ற

ஒரு மன்றத்திலே ஏற வேண்டுமென்றால் அதற்கு என்று தனிப் பாங்கினைக் கொண்டிருக்க வேண்டுமென்று, அதற்கான பாங்குகளை எல்லாம் இளங்கோவடிகள் வருணித்து இருப்பதற்கிணங்க பாங்கறிந்து அத்தனை பேரும் இந்த அவையிலே பாடுபடுவோமாக என்று சொல்லி, அந்த வகையிலே பேரவையினுடைய தலைவராக வந்து இருப்பவருக்கும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பவருக்கும் இந்த அவையின் சார்பாக எங்களுடைய முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு அளிப்போம் என்று உங்கள் அத்தனை பேரையும் நம்பி நான் அவை முன்னவர் என்ற முறையில் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே இந்தப் பேரவையில் ஜனநாயகம் வாழட்டும், ஜனநாயக முயற்சிகள் எல்லாம் நல்ல முறையிலே வளரட்டும், ஜனநாயக முடிவுகள் எல்லாம் நல்ல முறையிலே வெல்லட்டும் என்று கூறி என்னுடைய வாழ்த்தையும், வரவேற்பையும், நன்றியையும் தங்களுக்கும், பேரவையினுடைய துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு பேராசிரியர் பொன்னுசாமி அவர்களுக்கும் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், துணை சபாநாயகர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் இந்தப் பேரவை உறுப்பினர்களாலே ஏகோபித்து ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உங்களை நான் என் சார்பிலும், காங்கிரஸ் கட்சி சார்பிலும் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த நாற்காலிக்கு ஒரு சரித்திரம் உண்டு. இந்த நாற்காலி 1921 ஆம் ஆண்டிலே, அன்றைய தினம் நம்முடைய சென்னை ராஜதானியினுடைய ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபு அவர்களாலே பரிசாக அளிக்கப்பட்ட ஆசனம். அவர் பரிசாக அந்த ஆசனத்தை, நாற்காலியை அளித்த நேரத்தில் 'நீங்களும், உங்களைத் தொடர்ந்து இந்த ஆசனத்தில் அமரப் போகின்றவர்களும் இந்தச் சட்டப் பேரவையின் கௌவுரவத்தையும் கண்ணியத்தையும் கட்டிக் காப்பார்கள்' என்று கூறி அந்த ஆசனத்தை வெலிங்டன் பிரபு அவர்கள் அன்றைய தினம் பரிசாக அளித்தார்கள். இந்தச் சிறப்பு வாய்ந்த ஆசனத்திலே மாண்புமிகு முன்னவர்

அவர்களும் நானும் தங்களை அழைத்து வந்து அமரச் செய்தோம். நிச்சயமாக இழுத்து வரவில்லை. ஏனென்று சொன்னால் அவை முன்னவர் அவர்கள் பேசும்போது இங்கே குறிப்பிட்டார்கள். அன்றைய தினம் இழுத்து வருவார்கள் ; கட்டாயமாக நாற்காலியிலே அமரச் செய்வார்கள்; எழுந்து ஓடிவிடக்கூடாது என்று பிடித்துக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். உண்மைதான். அப்படிச் செய்தால்தான் ஸ்பீக்கர், மகாராஜாவைச் சந்திக்கின்ற நேரத்தில், மன்னரைச் சந்திக்கின்ற நேரத்தில், Your Majesty was compelled to take the Chair of the Commons என்று சொல்வார்கள். நானாக அங்கே வந்து அமரவில்லை, தேர்ந்தெடுத்த உடனே நான் அங்கே வந்து விடவில்லை, என்னைக் கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தப்படுத்தி இந்த ஆசனத்திலே அமரச் செய்தார்கள் என்று மன்னரைச் சந்திக்கின்ற நேரத்தில் அவர், அவரிடத்திலே கேட்டுக் கொள்வார்கள் என்று அன்றையதினம் சொல்வார்கள்.

10-25 மணி

அதே போல ஸ்பீக்கரின் வேலை என்பது, அன்றையதினம் மன்னரை, காமன் சபை உறுப்பினர்களாலே சந்திக்க முடியாது. காமன் சபை, அதாவது மக்கள் சபை எடுக்கின்ற முடிவுகளை மன்னரிடத்தில் நேரடியாகச் சந்தித்து எடுத்துரைக்க முடியாது. தீர்மானங்களை எடுத்துச் சொல்ல முடியாது. எனவே ஒரு நபர் அதற்குத் தேவைப்பட்டார். அந்த நபரை மன்னர் தேர்வு செய்கிறார். He was appointed. The Speaker was not elected, but he was appointed by the Crown. அவர் தேர்வு செய்து அமரச் செய்த நபர் தான் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

அவருக்குத்தான் அந்தக் காலத்திலே பிறகு சங்கடங்களும் வந்தன. அங்கே என்ன தீர்மானங்களை நிறைவேற்றினார்கள் என்று சொல்லியாக வேண்டும். மன்னருக்கு என்ன தேவை ? நிதி தேவை ; பணம் தேவை ; வரி விதிக்க வேண்டும் ; வரி விதிக்க வேண்டுமென்று சொன்னால் காமன் சபையின் அங்கீகாரம் வேண்டும் ; காமன்சபை அதை மட்டும் செய்ய வேண்டும் என்பது மன்னருடைய தரப்பு வாதம். ஆனால் உறுப்பினர்கள் சொன்னார்கள், நிச்சயமாக எங்களுக்கு அதற்கு மேலேயும் அதிகாரம் உண்டு ; அதற்கு மேலேயும் அதிகாரம் வேண்டும் ; குறைந்தபட்சம் எங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்கின்ற அந்த உரிமையாவது எங்களுக்கு வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இதைப் போய்ச் சொல்கிற நேரத்தில் எல்லாம் ஸ்பீக்கருடைய தலைக்கு என்ன கதி ஏற்பட்டது என்பதைப் பற்றி இங்கே அவை முன்னவர் அவர்கள்

எடுத்துச் சொன்னார்கள். 1884 ஆம் ஆண்டில் Richard II இருந்த நேரத்திலே ஸ்பீக்கரைத் தேர்வு செய்கின்ற முறை வந்தது. காமன் சபையே தேர்வு செய்யலாம் என்று Richard II அவர்கள் அன்றைய தினம் அந்த அதிகாரத்தை வழங்கினார்கள். அதற்குப் பிறகு சிறுகச் சிறுக ஸ்பீக்கருடைய அதிகாரம், அதிகார வரம்பு அதிகமாகியது.

அதேபோல உறுப்பினர்களுக்கும் உரிமைகள் வந்தன. உறுப்பினர்கள் பேசலாம். அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன் வைக்கலாம். கோரிக்கைகளை எடுத்துச் சொல்லலாம். அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டாலொழிய உங்களுக்கு நிச்சயமாக வரி விதிக்கின்ற அந்த அதிகாரத்தை நாங்கள் தர மாட்டோம் என்று சொல்லி, அன்றைய தினம் காமன் சபையிலே தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். இப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தாலேதான் அவர் சொன்ன ஒரு தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டது. Charles I என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த மன்னர் அங்கே ஆட்சிப் பீடத்தில் இருந்த நேரத்திலே காமன் சபையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். வரி விதிக்கலாம் பின்னால், இப்பொழுது நாங்கள் சொல்லுவதற்கு உங்களுடைய பதில் வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னாலே, ஐந்து உறுப்பினர்கள் முன் நின்று அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். தீர்மானம் மன்னருடைய கைக்குக் கூடப் போகவில்லை. மன்னர் உடனே ஸ்பீக்கரிடத்திலே, சபாநாயகரிடத்திலே சொன்னார், அந்த 5 பேரையும் என்னிடத்தில் ஒப்படைத்து விட வேண்டுமென்று. காமன் சபை உடனடியாக அவர்களை ஒப்படைக்கவில்லை. அதற்குப் பதிவாக ஒரு குழுவை நியமித்து விசாரணை நடத்த வேண்டுமென்று ஸ்பீக்கர் தீர்ப்பு அளித்தார். ஸ்பீக்கரும், காமன் சபையும் உடனடியாக அவர்களுடைய பாதுகாப்புக்கு முதல் கட்டத்தில் வரவில்லை என்றாலும், தீர்ப்பளித்ததற்குப் பின்னால், சபைக்குள்ளே வந்து, மன்னர் அந்த 5 பேரையும் கைது செய்யக் கூடிய நிலைமை ஏற்படப் போகிறது என்று சொன்ன நேரத்தில் அவர்கள் சபைக்கு வராமல் இருந்து விடலாம் என்று ஸ்பீக்கர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்கள். ஆனால் மன்னர் அதை ஒப்புக் கொள்ளவில்லை. மன்னர் அதை நம்பத் தயாராக இல்லை. நேரடியாக மன்னரே சபைக்கு வந்தார். பிரிட்டிஷ் வரலாற்றிலேயே, பாராளுமன்ற வரலாற்றிலேயே ஒரே ஒரு முறை தான் மன்னர் பாராளுமன்றத்திலே, மக்கள் சபைக்குள்ளே நுழைந்து இருக்கிறார். நுழைந்து நேரடியாக ஸ்பீக்கருக்கு எதிரே வந்து நின்று "எங்கே நான் கேட்ட அந்த

5 பேர் '' என்று கேட்டபோது, சபாநாயகர், ஆசனத்தைக் காலி செய்து விட்டு வெளியே நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நேரடியாக மன்னர் அங்கே போய் அமர்ந்தார்.

ஒரு சிறிய பேச்சினைத் தொடர்ந்து 5 பேரையும் உடனடியாக என்னிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டார். எங்கே அந்த Pym என்று கேட்டார். எங்கே அந்த Hampdon, எங்கே அந்த Holles என்று கேட்ட நேரத்திலே, ஸ்பீக்கர் அவர்கள் தாழ்பணிந்து Virtually, he bent down on his knees, "may I please your Majesty, I have neither eyes to see nor tongue to speak in this place, but the House is pleased to direct me whose servant, I am here and I humbly your Majesty's pardon, that I cannot give any other answer than this, to what your Majesty pleased to demand on me" என்று அன்றைய தினம் ஸ்பீக்கர், மன்னர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அது வரலாறு.

அந்த வரலாற்றுக்குப் பின்னால் என்ன ஏற்பட்டது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஸ்பீக்கர் தன் தலை தப்பிக்க ஓடி ஒளிந்து கொண்டார். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னாலே ஸ்பீக்கர் தலைக்கு ஆபத்து வந்து விடவில்லை. ஸ்பீக்கருடைய தலை தப்பியது. ஆனால் மன்னருடைய தலை தான் தப்பவில்லை. மக்களுடைய கோபத்தின் காரணமாக அன்றைய தினம் மன்னருடைய தலை தப்பவில்லை. ஜனநாயகம் அதற்குப் பின்னாலேதான் தழைத்து ஓங்கியது. அப்படி நமக்கு எல்லாம் வழி வகுத்துக் காட்டியிருக்கிற பிரிட்டிஷ் பாராளுமன்ற சம்பிரதாயங்களில் இருந்து நாம் பலவற்றைக் கற்றுக் கொண்டிருக்கிறோம்.

10-30 மணி

நம்முடைய நாட்டிலே கூட முதன் முதலாக இங்கே சட்டப் பேரவைகள், மத்திய சட்டசபைகள் வந்த போது பல நல்ல சபாநாயகர்கள், நல்ல பேரவைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல மரபுகளை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். 1928 ஆம் ஆண்டு மத்திய சட்டசபைக்கு சபாநாயகராக அன்றைய தினம் விதல்பாய் பட்டேல் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுடைய மூத்த சகோதரர் விதல்பாய் பட்டேல் அவர்கள். நீங்கள் டெல்லியிலே, மக்கள் அவை உறுப்பினராக இருந்தவர்கள். உங்களுக்குத் தெரியும். அங்கே அவருடைய படம் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. விதல்பாய் பட்டேல் அவர்கள் பெயராலே

1991 ஜூலை 3] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

ஒரு பெரிய பகுதியே இருக்கிறது. 'விதல்பாய் பட்டேல் ஹவுஸ்' என்ற பகுதி இருக்கிறது. விதல்பாய் பட்டேல் அவர்கள் பதவி ஏற்ற உடனேயே, அவருடைய பக்கத்திலே மோதிலால் நேரு அவர்கள் வீற்றிருந்தார்கள். அவரிடம், ''மோதிலால், இன்று முதல் நான் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர் இல்லை, என்னுடைய பெயரை அதிலிருந்து அகற்றி விடுங்கள், கட்சியினுடைய ஜுவாலை என்னுடைய உள்ளத்திலே எரிந்து கொண்டு இருக்கும், நான் கட்சிப் பாகுபாடின்றித்தான் செயல்படுவேன்'' என்று அன்றையதினம் சொன்னதை, வரலாற்றிலே இடம் பெற்றுவிட்ட அந்த வார்த்தைகளை நான் உங்களுக்குக் கவன மூட்ட விரும்புகிறேன்.

அதைப் போல சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விருப்பு வெறுப்புக்கு ஆளாகாமல் செயல்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே கூட பல சபாநாயகர்கள் பெயரைச் சொல்லலாம். குறிப்பாக புலுசு சாம்பமூர்த்தி அவர்களைச் சொல்வார்கள். 1952 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பின்னாலே, முதன் முதலாக தமிழ்நாட்டிலே சபாநாயகர் பொறுப்பேற்ற திரு. சிவசண்முகம்பிள்ளை அவர்களைப் பற்றி அனைவரும் பெருமிதத்தோடு குறிப்பிடுவார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் குலத்திலே பிறந்த அவர்கள் நல்ல தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் எப்போதுமே கட்சிப் பாகுபாடின்றிச் செயல்பட்டார்கள் என்பதை அத்தனை பேரும் தெரிவித்தார்கள்.

அதைப்போல அறிஞர் அண்ணா அவர்களாலே இந்த அவையிலே மிகவும் பாராட்டப்பெற்ற திரு. யு. கிருஷ்ணாராவ் அவர்களைப் பற்றி அத்தனை பேருக்கும் தெரியும். ஒரு கட்டத்திலே, ஆளுங்கட்சி வரிசையிலிருந்து, ''எப்போது பார்த்தாலும் எதிர்க் கட்சியிலிருந்தே பேச விடுகிறீர்களே, எங்களைப் பேச விடக் கூடாதா'' என்று அவரிடம் கேட்டபோது, ''நீங்கள் அதிகமாகப் பேச வேண்டுமானால் அங்கே உட்காராதீர்கள், எனக்கு இடது பக்கத்திலே வாருங்கள்'' என்று சொன்னதாக சொல்லுவார்கள். அந்த அளவுக்குச் சுதந்திரமாக, ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காத்த நல்ல சபாநாயகராக அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அதற்குப் பின்னாலே இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களாக இருந்தாலும் சரி, அதற்குப் பின்னாலே 1967-லே பொறுப்பேற்ற திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களானாலும் சரி, நல்ல முறையிலே பணியாற்றி இருக்கிறார்கள். திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள்தான் தமிழிலே அதிகமான நடவடிக்கைகளைக் கொண்டுவரக் காரணமாக இருந்தார்கள். 'ஏற்போர் ஆம்

என்க, மறுப்போர் இல்லை என்க' போன்ற தமிழ்ச் சொற்கள் எல்லாம் அவருடைய காலத்திலேதான் அறிமுகப்படுத்தப் பட்டன.

அதைப்போல நேற்றையதினம் காலமான முன்னாள் சபாநாயகர் புலவர் கோவிந்தன், திரு. மதியழகன் போன்ற பல சபாநாயகர்கள் நம்முடைய சபையிலே இருந்திருக்கிறார்கள். ஜனநாயகத்திலே சட்டமன்றமும், நீதித் துறையும், நிர்வாகமும் மிகவும் முக்கியமானவை. இங்கே நடைபெறும் விவாதங்கள் பலனளிக்கும் விவாதங்களாக இருக்க வேண்டும். அனைவருக்கும் பேசுவதற்கும், கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும் சந்தர்ப்பம் வேண்டும். நீங்கள் சட்டமன்றத்திலேயும் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். பாராளுமன்றத்திலேயும் பாராளுமன்ற அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்கள். நம்முடைய பாராளுமன்றத்திலே பின்பற்றப்படுகின்ற பல நல்ல சம்பிரதாயங்களை இந்த அவையிலேயும் பின்பற்ற தாங்கள் முன்வர வேண்டுமென்று தங்களிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சபையிலே புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். எங்களுடைய கட்சியிலே 61 பேர் இருக்கிறோமென்று சொன்னால், அதிலே 35 பேர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். ஆளுங்கட்சியிலே கூட பலர் முதன் முறையாகப் பேரவைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் தவறுகள் செய்யலாம். விதிகளைப் பின்பற்றாமல் இருக்கலாம். அந்த நேரத்திலே எல்லாம் நீங்கள் பொறுத்தருள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல உங்களுக்கு வலப் பக்கத்திலே இருப்பவர்களைக் காட்டிலும்—திரு. யு. கிருஷ்ணாராவ் அவர்கள் குறிப்பிட்டது போல—இடப் பக்கத்திலே உள்ளவர்களுக்கு, பேசுவதற்கு அதிக சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் படித்தவர்கள். எம். எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்கிறீர்கள். அமைதியானவர். உரத்த குரலிலே பேசி அடுத்தவர்களுக்கு ஆத்திரமூட்டாதவர்கள். சுருக்கமாகச் சொன்னால் Soft spoken and mild mannered என்று சொல்லலாம். மற்றவர்களிடம் பழகுவதில் மிகவும் இனிமையானவர் என்பதை நான் நன்றாகவே அறிவேன். முன்பெல்லாம் சபாநாயகர் ஆசனத்திற்கு வருகிறவர்களை நீதிபதிகள் நியமிப்பார்கள். வயதானவர்களை, முதிர்ந்தவர்களை நியமிப்பார்கள். அனுபவம் மிக்கவர்கள்தான் சபாநாயகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். அவர்கள் வயது முதிர்ந்தவர்களாக இல்லை என்றால் அவர்கள்

வெள்ளை 'விக்' வைத்துக் கொள்வார்கள். வயதிலே முதிர்ந்தவர்கள் போல் காட்ட 'விக்' வைத்துக்கொள்வார்கள். அந்தத் தோற்றம் இருக்க வேண்டுமாம். நீதிமன்றத் தீர்ப்பிற்குக் கூட மேல் முறையீடு உண்டு. ஆனால் உங்களுடைய தீர்ப்புக்கு மேல் முறையீடு கிடையாது. 'அப்பீல்' கிடையாது. எனவே நீங்கள் நல்ல மரபுகளைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அவை முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம், எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் என்பது நம்முடைய அரசமைப்புச் சட்டம் வழங்கியது தான். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழே அவை விதிகளை அமைத்திருக்கிறோம். ஆக, சபையிலே யாருக்கு என்ன அதிகாரம் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசமைப்புச் சட்டத்திலே இல்லை என்று சொன்னால், அவை விதிகளிலே இல்லை என்று சொன்னால், if there is any ambignity, அப்போதுதான் எஞ்சிய அதிகாரம் என்பது வருகிறது. எனவே சபாநாயகருக்கு எஞ்சிய அதிகாரம் உண்டு, விஞ்சிய அதிகாரம் உண்டு, வானளாவிய அதிகாரம் உண்டு என்று முன்னுதாரணம் இருந்தாலும் கூட, தயவுசெய்து தாங்கள் அதைக் கருத்திலே கொள்ளக் கூடாது என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் ஒரு கட்டத்திலே சட்டசபையிலே செங்கோல் வளைந்து விட்டதோ என்று நாங்கள் எல்லாம் அஞ்சினோம். அவை முன்னவர் கூடக் கோடிட்டுக் காட்டினார். உங்களுடைய காலத்திலே வளைந்த செங்கோல் நிமிர வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

10-35 மணி

பொதுவாக வக்கீல்களாக இருப்பவர்கள் தங்களுடைய கட்சிக்காரர்களுக்காக மட்டும் வாதாடுவார்கள். ஆனால் அந்த வக்கீல் நீதிபதியாக நியமிக்கப்பட்டதற்குப் பின்னாலே பொறுமையாக இருதரப்பு வாதங்களையும் கேட்பார். இந்தத் தரப்பில் என்ன சொல்கிறார்; அந்தத் தரப்பில் என்ன சொல்கிறார் என்று கேட்டு—இருதரப்பு வாதங்களையும் கேட்டதற்குப் பின்னாலேதான் தீர்ப்புகள் எழுதுவார். அதேபோல் நீங்கள் வழங்குகின்ற தீர்ப்புகளும், நியாயத் தீர்ப்புகளும் சபையிலே உறுப்பினர்கள் இரண்டு பக்கத்தில் என்ன சொல்கிறார்கள் என இரண்டு தரப்பு வாதங்களையும் முழுமையாகக் கேட்டு நீங்கள் நியாயத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

[1991 ஜூலை 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.என்.ஆர். இராஜேந்திரன்

சட்டசபையிலே உறுப்பினர்கள் பேசும்போது ஆர்வக் கோளாறினாலே சில நேரங்களிலே ஆத்திரப்பட்டால் கூட, நீங்கள் ஒரு விஞ்ஞான மாணவர்; விஞ்ஞானப் பட்டதாரி; நீங்கள் உஷ்ணத்தைத் தணிக்க முயற்சிக்க வேண்டுமே தவிர, அதை மேலும் அதிகரிக்கத் துணை போகக் கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உங்களிடத்திலே நாங்கள் நிறைய நம்பிக்கை வைத்து இருக்கிறோம். சபாநாயகர் பொறுப்பில் 'சேடப்பட்டி', 'சோடை' போகமாட்டார் என்று உறுதியாக நம்புகிறேன்.

உங்களுக்குத் துணையாக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற துணைச் சபாநாயகர், பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் ஏற்கெனவே எங்களுடன் இதே பேரவையில் இரண்டு ஆண்டுக் காலம் பணியாற்றி இருக்கிறார். அவரை நாங்கள் எல்லாம் நன்றாக அறிவோம். எதையும் உழைத்துச் செய்ய வேண்டும் என்கிற நம்பிக்கை படைத்தவர். இங்கே பேசுவதற்கு வந்தால் கூட தெளிவாகப் படித்து ஒவ்வொரு வார்த்தையையும் அளந்துதான் பேசுவார்; அனாவசியமாகப் பேசமாட்டார். இனிமேல் அவர் விவாதங்களிலே அதிகமாகப் பங்கு ஏற்கமாட்டார் என்றாலும் கூட அவருடைய அனுபவம் பயனுள்ள அனுபவமாக இருக்கும். பேரவையை நடத்திச் செல்வதிலே நிச்சயமாக உங்களுக்கு உறுதுணையாக இருப்பார் என்று நான் நம்புகிறேன். நீங்கள் இரண்டு பேரும் நல்ல ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காப்பதிலே முன்னணியில் இருக்க வேண்டும் என்று கேட்டு, மீண்டும் காங்கிரஸ் கட்சியின் சார்பில், சபையை நடத்திச் செல்வதிலே எங்களுடைய முழு ஒத்துழைப்பு உங்களுக்கு உண்டு என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

*திரு. என். ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் திறமையான அனுபவமிக்க தலைவரை இந்தச் சபைக்கு வழங்கியுள்ளார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிக அழகாகப் பாராட்டியும் வாழ்த்தியும் பேசினார்கள். இதை நாம் எல்லோரும் முழுமையாக ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சார்பாகவும், என்னைப் போன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் எங்கள் இந்திய மனித உரிமைக் கட்சியின் சார்பாகவும் என்னுடைய வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசியல் சபை, இந்திய வரலாற்றிலும் தமிழக வளர்ச்சியிலும் ஒரு பொற்காலமாகத்

**திகழ வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தை இந்தச் சபையின் முன் தெரிவித்துக் கொண்டு எனது வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.**

*10-40 மணி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஒருமனதாக, தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சூடேற்றிய பொன், சுடர் விடுவது போல எல்லோரும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. இங்கே அவை முன்னவரும், எதிர்க் கட்சித் தலைவரும் இங்கிலாந்து நாட்டின் பேரவைத் தலைவர் பற்றிய மரபுகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஆடையின்றி, அரசுடைமையின்றி தேம்ஸ் நதிக் கரையில் ஆங்கிலேயர்கள் வாடியபோதே அரசுரிமை பெற்று, சிறந்த பண்பாட்டின் உறைவிடமாக இருந்தது தமிழ்நாடு என்பதை, கடந்த ஈராயிரம் ஆண்டுக் கால வரலாற்றினை அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள்.

உலகத்திலே உள்ள சமுதாயத்தை நான்கு பிரிவுகளாகத்தான் பிரிக்க வேண்டுமென்று வருணாசிரம தருமத்தை எடுத்துச் சொல்லிய போது, '' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் '' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துக் காட்டிய வள்ளுவரைப் பெற்ற நாடு தமிழ்நாடு.

அதுமட்டுமல்ல. காட்டுமிராண்டிகளாய் உலகத்தின் பல்வேறு மூலைகளில் திரிந்தபோது, ஒவ்வொருவரும் ஒரு இனத்தவராக, மொழியினராக, நாகரீகம் இல்லாமல் அலைந்தபோது, '' யாதும் ஊரே யாவரும் கேளீர் '' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துச் சொன்ன மரபு தமிழ் மரபு.

கற்றறிந்த நீங்கள் அந்த தமிழ்க் குடியிலே பிறந்தவர். இன்று நீங்கள் தலைமை வகித்து இந்த மன்றத்தை நடத்துகிறீர்கள் என்றால் இந்த மன்றம் இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே எடுத்துக்காட்டாக, கண்ணியமிக்க மன்றமாக இருக்கும் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை. கண்ணியத்தைக் காப்பது மட்டுமல்ல, கண்ணியத்தை வளர்க்கவும் செய்வீர்கள் என்பதை நான் முழுவதும் நம்புகிறேன். எங்களைப் போன்றவர்களுடைய முழு ஒத்துழைப்பு நிச்சயமாக உங்களுக்கு உண்டு.

## பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 ஜுலை 3

மக்களாட்சியின் சிறந்த அம்சம் சட்டமன்றம். மக்களாட்சியின் மாண்பை, பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நன்கு அறிவீர்கள். 25 ஆண்டுகளாக நாம் பழகி வருகிறோம். ஏன், இன்று இரு வேறு முகாம்களில் இருந்தாலுங்கூட நம்மைப் பயிற்றுவித்தவர்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களும்தான். 25 ஆண்டுகளாக ஒன்றாகப் பழகி வருவதாலே சொல்லுகிறேன். 1969 ஆம் ஆண்டு தாங்கள் மாணவர் இயக்கத்திலே ஈடுபட்டிருந்தபோது, அப்போதே இதே சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கும் வாய்ப்பைப் பெற்றேன் நான். அன்றையதினம் மாணவர்கள் மத்தியில் தேர்தல் வந்தது. பெரும்பாலான மாணவர்கள் தங்களைப் போன்றோரை ஆதரிக்க, அன்றைக்கு அந்த இயக்கத்தின்—நாம் எல்லாம் சேர்ந்து இருந்தோமே அந்த இயக்கத்தின்—தலைவர், "நான் சொல்லுகிற ஆள்தான் வெற்றி பெற வேண்டும்" என்று பிடிவாதமாக இருந்தபோது அவர் ஆட்சியிலே இருக்கிற முதலமைச்சராக இருந்தாலும் பரவாயில்லை என்று எதிர்த்து மக்களாட்சியை நிலைநிறுத்திய பெருமை, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு உண்டு என்பதை நான் நன்கு அறிவேன்.

நம்முடைய அவை முன்னவர் அவர்கள், இந்தச் சட்ட மன்றத்தில் சில பல நேரங்களில் அமளி ஏற்படுகிறது என்று சொன்னார்கள். எப்போதெல்லாம் அநீதி இழைக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் அமளி ஏற்படும். அநீதியை எதிர்த்துப் போராடுவதுதான் அரசியல் என்பதை அரசியல் அறிந்தவர்கள் நன்கு உணர்வார்கள். மூன்றாண்டுகளுக்கு முன்னால் இதே மன்றத்தில் அநீதி இழைக்கப்பட்டபோது ஆர்த்தெழுந்த வீரர்களில் ஒருவராக தாங்கள் இருந்த காட்சியை என்றைக்கும் என் நெஞ்சிலே இருந்து என்னாலே நீக்க முடியாது. ஆகவே தாங்கள் சிறந்த ஜனநாயகப் பண்பாளர், சிறந்த நீதி நெறியாளர் என்று கருதுகிற போது இந்த மன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்கும் தகுதிகள் அனைத்தும் தங்களுக்குச் செவ்வனே உண்டு.

மதுரையைப் பற்றிப் பரிபாடலில் அழகாக இரண்டு வரிகள் வருகின்றன. அதாவது—

"விறன்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க் களியு நீ
திறனிலோர்த் திருத்திய தீதுதீர் சிறப்பின்
மறனும் மாற்றலர்க் கணங்கு நீ."

அறத்தைக் காப்பாற்றுவது முதல் கடமை. நன்னெறியில் செல்லாமல் தீயநெறியில் செல்வார்கள் என்றால் அவர்களைத் திருத்து

வது இரண்டாவது கடமை. அப்படித் திருத்துவதே முடியாவிட்டால் தண்டனை வழங்குவது மூன்றாவது கடமை என்று இன்று நேற்றல்ல, அன்றைக்கே தமிழ்ப் புலவர், அதுவும் மதுரையைச் சேர்ந்தவர் சொல்லியிருக்கின்ற காரணத்தாலேயோ என்னவோ மதுரையைச் சார்ந்த தாங்கள் இந்த மன்றத்திற்குத் தலைவராக வந்திருக்கிறீர்கள்.

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் நிறைய வாய்ப்பு வேண்டும் என்று கேட்டபோது எனக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது. ஏனென்றால் எதிர்க் கட்சி உண்மையிலேயே நாங்கள்தான். இளைத்தவர்களாக இருந்தாலும் எதிர்த் தரப்பிலே நின்று வெற்றி பெற்றவர்கள் நாங்கள்தான். மாப்பிள்ளைக்குத் தோழனைப் போல காங்கிரஸ் கட்சி இருக்கிறது. அவர்கள் வேண்டுமானால் சில நேரத்திலே எப்படி மாப்பிள்ளைத் தோழர் மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் குறும்புத்தனமாகப் பேசலாம் என்ற அளவிலே இருப்பார்களோ, அதைப்போலத்தான் அவர்கள் இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

10-45 மணி

ஆகையினாலே பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் எங்களுடைய எண்ணத்தை நீங்கள் தயவு செய்து புரிந்துகொண்டு அதற்கேற்ப நிறைய வாய்ப்புத் தாருங்கள் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கின்றேன். எதிர்க்கட்சிகளைப் பற்றியும், எதிர்க்கட்சிகளின் இலக்கணத்தைப் பற்றியும் இதே மன்றத்தில் ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். ‘‘கார் நன்றாக ஓட விசை இருந்தால் மாத்திரம் போதாது; அது தவறான வழியில் சென்றால் தடுக்க பிரேக்கும் வேண்டும், நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மாத்திரம் போதாது, அதிலேயிருந்து வெள்ளம் கரைபுரண்டு ஊரை அழித்துவிடாமல் இருக்க கரை வேண்டும். நல்ல காளையை ஓட்ட சிறு சவுக்கு இருந்தால் மாத்திரம் போதாது, அதைக் கிழக்கேயும் மேற்கேயும் திருப்ப நல்ல மூக்கணாங்கயிறும் வேண்டும். நாட்டில் நல்லாட்சி நடக்க ஆளுங்கட்சி ஒன்று இருந்தால் மட்டும் போதாது. எதிர்க்கட்சியும் இருக்க வேண்டும். எதிர்க்கட்சி இல்லாத அரசு பிரேக் இல்லாத கார்; கரையில்லாத ஆறு; மூக்கணாங்கயிறு இல்லாத மாடு’’ என்று அறிஞர் அண்ணா அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள்.

எதிர்க்கட்சி இங்கே இல்லையென்று பொருள் இல்லை. எண்ணிக்கையிலே குறைவாக இருந்தாலும் நிச்சயமாக தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எடுத்துத் தரவேண்டிய கருத்துக்களை நாங்கள்

சட்டமன்றத்திலே எடுத்துவைப்போம். அதுவும் கண்ணியத்தோடு எடுத்துவைப்போம். நாகரீகத்தோடு எடுத்து வைப்போம், நடுநிலை இழந்து நிச்சயமாகப் பேசமாட்டோம் என்ற உறுதியினை நான் பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றத் துணைத் தலைவர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேனே தவிர, பார்த்தோ, பழகியோ அனுபவம் கிடையாது. அறிவியக்கத்தின் வழி வந்தவர்கள் என்கின்ற காரணத்தால் நிச்சயமாகத் தங்களுக்குப் பெரும் துணையாகவும், இந்த சட்டமன்றத்தின் மரபைக் காப்பாற்றுகின்றவராகவும், அவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு, இருவருடைய தலைமையிலேயும் இம்மாமன்றம் தன் இழந்த பெருமைகளை மீண்டும் பெற்று உலகத்திலே எவ்வாறு தமிழ்நாடு உயர்ந்த இடத்தைப் பெறவேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் விரும்புகிறோமோ அதைப்போல, தமிழ்நாடு சட்டமன்றமும் திகழ தாங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் என் போன்றோரின் ஒத்துழைப்பும் நிச்சயம் உண்டு என்று கூறி அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. தம்புசாமி

*திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, இன்று நடைபெற்ற பேரவைத் தலைவர் தேர்தலில் போட்டியின்றி, தலைவர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் தேர்ந்தெடுத்தமைக்கு எனது சார்பிலும், நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பதவி என்பது எத்தகைய பொறுப்பு வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது என்பதை எனக்கு முன்னாலே உரையாற்றிய அவை முன்னவர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பல்வேறு உதாரணங்களைச் சுட்டிக் காட்டி, அதனுடைய சிறப்புக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையிலே இந்தப் பேரவைத் தலைவர் பதவி என்பது எத்தகைய பொறுப்பு வாய்ந்த பதவி என்று எடுத்துரைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே எதிர்காலத்தில் இந்த சட்டமன்றத்தின் கண்ணியத்தையும், அதன் ஜனநாயகத்தையும் சிறப்பான முறையில் தாங்கள் பாதுகாத்து நிலை நாட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த வகையிலே நாங்களும்

*1991 ஜூலை 3]* *[திரு. வி. தம்புசாமி]*

எதிர்க்கட்சி வரிசையிலிருந்து செயலாற்றுவதற்குப் போதுமான உறுப்பினர் எண்ணிக்கை இல்லாவிட்டாலும் ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில் இந்தத் தமிழகத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பெரிய கட்சி என்ற முறையில் அதனுடைய கோட்பாடுகளையும் கோரிக்கைகளையும் எதிர்காலத்தில் சட்டமன்றத்தில் எடுத்துரைப்பதற்கு நீங்கள் தேவையான நேரம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்களில் ஒருவனாக நான் இருந்தாலும், எங்களுடைய கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் பல அரங்குகளிலே பல்வேறு தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், விவசாயத் தொழிற்சங்கங்கள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். அவைகளின் கோரிக்கைகளை நாங்கள் எடுத்துச் சொல்வதற்குத் தேவையான கால அவகாசம் அளித்து, எங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் எதிர்காலத்தில் பரிசீலித்து, அவை நிறைவேறுவதற்கான சந்தர்ப்பத்தை நீங்கள் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த வகையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், எனது சார்பிலும் துணைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வாழ்த்துக்களைச் சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

10-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற ஜனதா தளக் கட்சியின் சார்பாக உங்களையும், துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு பேராசிரியர் பொன்னுசாமி அவர்களையும் வாழ்த்துகிற வாய்ப்பினைத் தந்தமைக்கு முதலில் எனது பணிவான நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இங்கே பத்தாவது சட்டமன்றத்தில் சபாநாயகராக நீங்கள் வீற்று இருக்கிறீர்கள் என்று சொன்னால் உங்களைப் பாராட்ட நான் வெகுவாகக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் 1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று, எட்டாவது சட்டமன்றப் பேரவையில் நானும் இந்தச் சபையில் உறுப்பினராக இருந்தேன். அந்த நேரத்தில் இன்றைக்கு பேரவைத் தலைவராகிய நீங்களும் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அன்றைய தினமே நம்முடைய நட்பு மிக நெருக்கமானதாக இருந்தாலும், கட்சி வேறுபாடின்றி பழகுகிற உங்களுடைய பெருந்தன்மையை நான் நினைவு கூர்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1991 ஜூலை 3

நீங்கள் சபாநாயகராகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த நேரத்தில் எதிர்க்கட்சி வரிசையில் நாங்கள் அமர்ந்திருந்தாலும், தான் உங்களிடம் வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், எதிர்க்கட்சி என்று சொல்கிற விதத்தில் நாங்கள் எண்ணிக்கையில் சிறியவர்களாக, எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருக்கலாம், அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. காரணம் கடந்த முறை தி.மு.க. ஆட்சி இங்கே நடைபெற்றபோது 142 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். மக்களுடைய மனநிலை எந்த நேரத்தில் மாறும் என்று யாருக்கும் தெரியாது. அப்படி மாறுகிற நேரத்தில், அடிக்கிற புயலில் அவர்கள் காணாமல் போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுவதுண்டு. அதைப் போல இன்றைக்குப் பெருவாரியான எண்ணிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற நீங்கள் எதிர்க்கட்சிகள் இவர்கள்தானே என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்படுவீர்கள் என்று சொன்னால், தீர்ப்புகள் பலவிதத்தில் வழங்கப்படக்கூடும். எனவே, எங்களுடைய எண்ணத்தின் பிரதிபலிப்புகளை, கருத்துக்களை, கருத்து மோதல்களை நீங்கள் கருத்தில் கொண்டு, நாட்டு மக்களுடைய நற்பலனுக்காக நாங்கள் கவனமாக ஆற்றுகிற உரையைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். கருத்துக்கள் மோதுகிற நேரத்தில் தயவுசெய்து ஆளும்கட்சி பக்கங்களிலிருந்து கரங்கள் நீளாதவாறு நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தவகையில் எங்களுக்குப் பாதுகாப்பை நீங்கள் தரவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒன்றை உங்களுடைய நினைவுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியத் திருநாட்டினுடைய முதல் பாராளுமன்ற சபை கூடிய நேரத்தில், அந்தச் சபையினுடைய சபாநாயகராக, மரியாதைக்குரிய மௌலாங்கர் அவர்கள் இருந்தார்கள். அந்த நேரத்தில் மனிதர்களில் புனிதர் என்று பாராட்டப்பட்ட ஜவஹர்லால் நேரு அவர்கள் தன்னைத் தன்னுடைய அறையில் வந்து சந்திக்க வேண்டுமென்று மௌலாங்கர் அவர்களுக்குத் துண்டுச் சீட்டைக் கொடுத்தனுப்பினார்கள். அந்த நேரத்தில் மரியாதைக்குரிய பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள், தேவையானால் என்னை என்னுடைய அறையில் அவர்கள் வந்து பார்க்கட்டும், நான் அவரைப் போய் பார்ப்பதற்கு முடியாது என்று சொன்ன நேரத்தில், மனிதருள் மாணிக்கமான ஜவஹர்லால் நேரு அவர்கள் தான் செய்த தவறினை உணர்ந்து அவர்களிடம் வருத்தம் தெரிவித்து, அவருடைய அறையிலே சென்று பார்த்ததாக வரலாறு உண்டு. அதைப்போல இந்தச் சபையில் உள்ள யாராக இருந்தாலும் சரி, உங்களை அவர்களுடைய அறைகளுக்கு அழைப்ப

1991 ஜூலை 3] [டாக்டர் தே. குமாரதாஸ்]

தற்குப் பதிலாக, உங்களுக்குத் தரப்பட வேண்டிய மரியாதையின் அடிப்படையில் உங்கள் அறையில் வந்து பார்க்கிற ஒரு மரபை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய நேர்மையான செயல்பாடுகள் மூலமாக, பத்தாவது சட்ட மன்றத்தினுடைய தலைவராக இருக்கிற திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் முத்தான முத்தையா என்று எல்லோரும் பாராட்டுகிற விதத்தில் விளங்க வேண்டும். அந்த வகையில் உங்களுடைய செயல்பாடுகள் அமைய வேண்டும். எதிர்க்கட்சி வரிசையில் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் எங்களுடைய கருத்துக்களை உங்களிடம் எடுத்துரைப்பதற்கு வெகுவான நேரத்தை நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-55 மணி

அதேபோல் நம்முடைய பேராசிரியர் பொன்னுசாமி அவர்களையும் நான், எங்களுடைய கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன். நான் எவ்வாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேனோ, அதேபோல், நீங்கள் நேர்மையுடன் செயல்பட்டு எதிர்க்கட்சி என்று பார்க்காமல், ஆளும் கட்சி நண்பர்களுக்குக் கொடுக்கக்கூடிய முக்கியத்துவத்தைவிட அதிகமாக, எதிர்க்கட்சி நண்பர்களுக்கு, பேசுகின்ற, கருத்துக்களை எடுத்துரைக்கின்ற வாய்ப்பினைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு இங்கே, உங்களைப் பாராட்டிப் பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த அனைத்து நண்பர்களுக்கும், பெரியோர்களுக்கும் வணக்கத்தைக் கூறி அமர்கிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு எஸ். திருநாவுக்கரசு :

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது சட்டமன்றத்தில் ஒருமனதாக, பேரவைத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற தங்களையும், துணைத் தலைவர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களையும் மனமார, இதய பூர்வமாக வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

இந்த மாமன்றம் நீண்ட நெடிய புகழுக்குச் சொந்தமானது. வரலாற்றுச் சிறப்புமிக்கது. பிரிட்டிஷ் ஆட்சியினர் இரட்டை ஆட்சி முறையை இந்தியாவிலே கொண்டு வந்தபோது, பரீட்சார்த்தமாக முதன் முதலிலே ஜனநாயகத்தை நடைமுறைப் படுத்த விரும்பியது 1919-லே தமிழ்நாட்டிலும், பஞ்சாபிலும் தான். அன்றிலிருந்து சென்னை ராஜதானி, சென்னை

மாகாணம் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு, அன்றைக்கு இருந்த இந்தச் சட்டமன்றம், கவுன்சில் என்கிற பெயரால் அழைக்கப்பட்டு, அந்தக் காலத்திலிருந்து சுமார் சற்றேறக்குறைய 70, 72 ஆண்டுக் காலம், நீண்ட நெடிய மரபை, புகழைப் பெற்று இருக்கிற மாமன்றம் இந்த மாமன்றம்.

எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1922-லே 'லார்ட் வெலிங்டன்' அவர்களும் 'லேடி வெலிங்டன்' அவர்களும், இந்த மன்றத்தினுடைய , அதற்கு முன்னாலே நடைபெற்ற நடைமுறைகளைப் பாராட்டி அன்பளிப்பாக 1922-லே வழங்கிய சிறப்புமிக்க நாற்காலி நீங்கள் அமர்ந்திருக்கிற இந்த நாற்காலி. எனவே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாற்காலியில் அதனுடைய பேரவைத் தலைவராக நீங்கள் அமர்த்தப்பட்டு இருக்கிறீர்கள். ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களை நான் பாராட்டுகிறேன்.

எனக்கு முன்னாலே வாழ்த்துரை வழங்கிய அவை முன்னவர் டாக்டர் நாவலர் அவர்களும், அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே உரையாற்றியபோது. பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையில் சபாநாயகருடைய தலை வெட்டப்பட்டதையும். சபா நாயகர்கள் சிறையிலே அடைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்கள். விவாதம் அதைப்பற்றியே நீண்ட நேரம் நடந்ததால். ஏதோ தவறான இடத்திலே உட்காரவைத்துவிடப்பட்டுவிட்டோமோ என்கிற பய உணர்ச்சி உங்களுக்கு நிச்சயமாக ஏற்படாது என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். அது மன்னர்கள் ஆட்சிக் காலம். மக்கள் ஆட்சிக் காலத்தில், மக்களாட்சியினுடைய மாண்புகளை, ஜனநாயக உரிமைகளை, உணர்வுகளைப் போற்றி, காப்பாற்றி, பாதுகாக்கவேண்டிய இடத்திலே நீங்கள் இன்றைக்கு அமர்ந்து இருக்கிறீர்கள்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மன்றத்தில், அந்த நாற்காலியில் பல புகழ்மிக்க மாமன்றத் தலைவர்கள் அமர்ந்து வரலாற்றுச் சிறப்புமிக்க பல தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள். இந்த மன்றத்தைச் சிறப்பாக நடத்தி இருக்கிறார்கள். திருவாளர்கள் கிருஷ்ணாராவ், சிவசண்முகம் பிள்ளை, கோபால மேனன், அதற்குப் பின்னால் திரு. செல்லபாண்டியன், அதற்குப் பின்னால் திரு. ஆதித்தனார், அதற்குப் பின்னால், திரு. மதியழகன், இன்றைக்கு அமைச்சராக உட்கார்ந்து இருக்கிற திரு. ராசாராம் ஆகியோர் உள்ளிட்ட பல பேர்கள் அந்த நாற்காலியிலே அன்றைக்கு உட்கார்ந்து இந்தச் சபையை மிகச் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள்.

1991 ஜூலை 3] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

சபாநாயகர் என்று சொன்னால், பேசுபவர், பேச்சாளர் என்று பொருள். ஆனால் நீங்கள் உட்கார்ந்து இருக்கிற இடத்திலே உட்கார்ந்து, யார் அதிகம் பேசாமல் இருந்து இருக்கிறார்களோ, அவர்கள்தான் நல்ல பேரவைத் தலைவர்களாகக் கடந்த காலத்திலே புகழ் பெற்றிருக்கிறார்கள். எனவே, உட்கார்ந்து இருக்கிற தலைவர்கள் பேசாமல், எதிரிலே உட்கார்ந்து இருப்பவர்களைப் பேசவிட்டு, யார் மிகக் குறைவாகப் பேசினார்களோ, அவர்கள்தான் இந்தச் சட்டமன்ற வரலாற்றில் மிகச் சிறந்த சபாநாயகர்கள் என்ற பெயரை எடுத்திருக்கிறார்கள். எனவே நீங்களும் அந்த வகையிலே எங்களை எல்லாம் செயல்பட அனுமதிப்பீர்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

11-00 மணி

நீங்களும் துணைச் சபாநாயகராக வந்திருக்கின்ற பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் அமைச்சர்கள் பட்டியலில் வருவீர்கள் என்றெல்லாம் பத்திரிகைகளில் ஹேஷ்யங்கள், வதந்திகள் வந்துள்ளன. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைவிடப் பெரிய பதவியிலே , அவர்களுக்கு மேலே உட்கார்ந்திருக்கிற நல்ல பொறுப்பிலே உங்களை உட்கார வைத்திருக்கிறார்கள். எனவே அந்த இடம் சிறப்பான இடம். அதை நான் குறிப்பிடக் காரணம், பல பேர் சபாநாயகராக இருக்கிற போது எப்போது அங்கிருந்து அமைச்சராக உட்காரலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டு கடந்த காலத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு, சபாநாயகராக இருக்கின்ற நீங்கள்—இந்தப் பொறுப்பு, சபாநாயகர் பொறுப்பு என்பது அமைச்சருடைய பொறுப்பு என்பதைவிட மிகத் தகுதி வாய்ந்த, சிறப்பான பொறுப்பு என்கின்ற உணர்வோடும், ஆர்வத்தோடும், நிச்சயமாகப் பணியாற்றுவீர்கள் என்கிற மனப்பூர்வமான நம்பிக்கை எனக்கிருக்கிறது. எனவே நீங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு, எதிர்க்கட்சிகளைச் சிறப்பான முறையில் செயல்படவிட்டு, நீங்கள் எங்களுக்கு எல்லாம், இந்த மன்றத்தினுடைய ஜனநாயக நடைமுறைகளைக் காப்பாற்ற உதவுவீர்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிடுகிறபோது சபாநாயகர் அவர்களைக் கொண்டுபோய் உட்கார வைக்கிறபோது, அவரை ஓடவிடாமல் பாதுகாப்பதற்காக ஆளுக்கு ஒரு பக்கம் இழுத்துச்சென்று உட்கார வைப்பதாகச் சொன்னார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. நீங்கள் ஒரு பக்கம் சாயாமல் இருக்கவேண்டும். நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் ஆளும் கட்சியின் சார்பாக பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்

களின் சார்பிலே எதிர்க்கட்சியினுடைய தலைவரும் ஆளுக்கு ஒரு பக்கமாக உங்களுடைய தோள்களைப் பற்றி, கரங்களைப் பற்றி அங்கே போய் உட்கார வைத்து, ஒரு பக்கத்திலே நீங்கள் சார்ந்து விடாதீர்கள் ; இரு பக்கத்திற்கும் நீங்கள் சொந்தமான வர்கள் ; ஆகவே இரு பக்கத்தினுடைய உணர்வுகளை நீங்கள் மதிக்கவேண்டும் ; ஜனநாயக முறையிலே செயல்பட வேண்டும் என்கின்ற வகையிலே எடுத்துக்காட்டத் தான் இரு பக்கத்திலே யும் இருந்து உங்களை நாற்காலியிலே அமர வைக்கிறார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். எனவே எதிர்க்கட்சி என்பது இதற்கு முன்னாலே பல முறை இந்தச் சட்டமன்றத்திலே சுட்டிக் காட்டியிருப்பதைப் போலவே நிழற் கண்ணாடியாகும், ஆளும் கட்சி தன்னுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு, அதிலே இருக்கின்ற பருக்களை, மருக்களைக் கண்ணாடியிலே பார்க்கிற போது தன்னை திருத்திக்கொண்டு, அழகுபடுத்திக் கொண்டு, சீராக இருப்பதற்காகப் பயன்படுகிற நிலைக் கண்ணாடி மாதிரி எதிர்க்கட்சி என்று சொல்வார்கள். எனவே எங்களைப் பார்க்கிற போது அல்லது நாங்கள் உரையாற்றுகிறபோது இந்த மன்றத் திலே தவறு இருந்தால் அல்லது ஆட்சியிலே குறைபாடு இருந்தால் அவற்றைக் களைந்துகொள்ள அந்த உரைகள் பயன்படுகின்றன என்கிற விதத்திலே நிலைக் கண்ணாடியாக எதிர்க்கட்சியும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

யானை பெரியதாக இருக்கலாம். யானையை அடக்கப் பயன்படுகிற அங்குசம் மிகச் சிறியதுதான். அதைப்போல தேர் பெரியதாக இருக்கலாம். அந்தத் தேர் தறிகெட்டு ஓடாமல் அதை ஒழுங்கான வழியிலே நடைமுறைப்படுத்துகிற கடையாணி மிகச் சிறியதுதான். எனவே எதிர்க்கட்சிகளுடைய எண்ணிக்கை யைக் கணக்கிலே கொள்ளாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டி.வி.யிலே உரையாற்றுகிறபோது சுட்டிக்காட்டியதைப் போல, எதிர்க்கட்சியினுடைய அளவைப் பார்க்க மாட்டோம், அவற்றினுடைய எண்ணங்களைப் பார்ப்போம் என்று சொன்ன தைப்போல இங்கே நீங்கள் எதிர்க்கட்சிகளுக்கு நல்ல வாய்ப்புக் கொடுத்து, இந்தச் சட்டமன்றத்தை ஜனநாயக முறையிலே நடத்துவீர்கள் என்று மனப்பூர்வமாக நம்பி உங்களை வாழ்த்து கிறேன், பாராட்டுகிறேன்.

திராவிட இயக்கத்திலே நீண்ட பங்கு உங்களுக்கு உண்டு. மாணவப் பருவத்திலேயிருந்து, இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்திலேயிருந்து திராவிட இயக்கத்தில் பணியாற்றி நான்காவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிற உங்களை மனப்பூர்வமாக, இதயப் பூர்வமாக வாழ்த்தி, உங்களோடு, உங்களுக்குத் துணையாக, துணைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற, அன்புக்

குரிய பேராசிரியர் பொன்னுசாமி அவர்களையும் வாழ்த்தி, உங்கள் இருவருக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஜி. பழனிச்சாமி.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏகமனதாக இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாகவும், என் சார்பாகவும் நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தங்களைப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து இருப்பது இந்தப் பேரவையின் நீண்ட கால அனுபவத்தைப் பெற்றவர் நீங்கள் என்பதுதான். அதோடு மட்டுமல்ல. இந்தப் பேரவை என்பது கடந்த காலங்களில் தமிழ் மக்கள், தமிழ் நாட்டில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுடைய நல்வாழ்வுக்காகத் திட்டமிட்டு செயல்படக் கூடிய ஒரு அவையாகும். இந்த அவையிலே பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல், தாங்கள், இந்தச் சபையினுடைய இறையாண்மையைக் காபந்து பண்ணக் கூடிய விதத்தில், தமிழ் சமுதாயம், தமிழ்நாடு இந்தியாவிலே ஒரு சிறந்த நாடு என்று மற்றவர்கள் போற்றக் கூடிய அளவில் அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்று நடத்த இருக்கிறீர்கள்.

11-05 மணி.

உங்களைப் பொறுத்த மட்டில், நம்முடைய பேரவையினுடைய முன்னவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்கட்சியினுடைய தலைவர் அவர்களும், பேரவைத் தலைவருடைய கடமைகளைப் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் கடந்த முறை சட்டமன்றப் பேரவையினுடைய உறுப்பினராக இருந்த போது, இந்த அவையிலே என்னோடு சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த, தற்போது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பேராசிரியர் அவர்களும், கண்ணியத்தோடு மக்களுடைய நலனுக்காகக் குரல் கொடுத்தவர், வாதாடியவர். அதேபோன்றுதான் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருக்கிற நாங்கள் எண்ணிக்கையிலே அதிகம் இல்லாவிட்டாலும், எங்களை எண்ணிப் பார்த்திருக்கிற மக்களுக்காகக் குரல் கொடுக்க, வாதாடி கருத்துக்களை எடுத்து வைக்கக்கூடிய ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம். ஆகையினால் எங்களுக்கு அந்த வாய்ப்பினை இங்கு அளிப்பதன் மூலமாகத்தான் எதிர்க்கட்சியினுடைய பெருமை வெளியே தெரிவதற்கான ஒரு வாய்ப்பாக அது அமைய முடியும். அந்த வகையில் நீங்கள் வாய்ப்பினைத்

தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நீங்கள் இந்த அவையினுடைய தலைவராக வந்ததை நான் பெருமையோடு வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஆண்டித்தேவர்.

திரு. சி. ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, தாங்களும் துணைத் தலைவர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும், இந்த மாமன்றத்தினுடைய தலைவர் ஆகவும், துணைத் தலைவராகவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு அனைத்து இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நான் மனமார வாழ்த்தி, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் இந்த மன்றத்தினுடைய நீண்ட வரலாற்று மிக்கச் சிறப்பினைக் கட்டிக் காத்திடுவீர்கள் என்றுதான் உங்களை இந்த மாமன்றத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் உறுப்பினராக வருவது என்பதே ஒரு சிறப்பாகும். அப்படி இந்த மாமன்றத்தில் உறுப்பினராக வந்து. இம்மாமன்றத்தினுடைய தலைவராகவும், துணைத் தலைவராகவும் நீங்கள் இருவரும் பொறுப்பேற்றிருக்கிறீர்கள் என்று சொன்னால், அது மிகவும் பெருமைக்குரிய ஓர் இடமாகும். இந்த மாமன்றத்தில் தலைவராகிய நீங்கள் நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பத்தாவது சட்டப் பேரவைக்குத் தலைமை தாங்குகிற அந்தப் பேறினைப் பெற்றிருக்கிறீர்கள் என்கிறபோது, என்னைப் போன்ற உறுப்பினர்கள் தங்களை மாணவப் பருவத்திலிருந்தே அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என்பதில் பெருமை கொள்ளுகிறோம். நீங்கள் பழகுவதற்குப் பண்பாளர். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பார்க்கிறபோதும், அவர்களுடைய கருத்துக்கள் என்னவாக இருந்தாலும் அவர்களையும் மதிக்கின்ற பண்பாளர் என்பதை அறிந்துதான், தங்களை இம்மாமன்றத்தினுடைய தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படி, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தங்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதுவே பெரிய பேறாகும். ஆகவே, இந்த மன்றத்தினுடைய வரலாற்றுச் சிறப்பினைத் தாங்கள் காத்திடுவீர்கள். அங்கத்தினர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுப்பது தங்களுடைய கடமையாகும். அங்கத்தினர்களுடைய உரிமைகள் பறிபோகிற வகையில் சில நேரங்களிலே இம்மன்றத்திலே தலைமை தாங்கியவர்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்கிற நிலைமைகளையெல்லாம் அறிந்தவர்கள் நீங்கள். நாடாளுமன்றத்திற்கு ஒரு முறை நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே நாடாளுமன்ற, சட்டமன்ற மரபுகளை அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் என்ற முறையில்,

1991 ஜூலை 3] [திரு. சி. ஆண்டித்தேவர்]

நீங்கள் இந்த மன்றத்தை நல்ல முறையில் வழி நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கை என்னைப் போன்றவர்களுக்கு உண்டு.

இங்கே இந்த மன்றத்தினுடைய விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடித்து நல்லமுறையில் இந்த மன்றத்தை நடத்திச் செல்ல வேண்டும் என்றுதான் இம்மாமன்றமே தங்களிடம் எதிர்பார்க்கிறது. சபையினுடைய நாயகராக, தலைவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். அதை ஆங்கிலத்திலே 'ஸ்பீக்கர்' என்று சொல்லுவார்கள். 'ஸ்பீக்கர்' என்று சொன்னால் பேசுகிறவர்கள் என்று பொருள். ஆனால் இந்த மன்றத்திலே தலைமை தாங்குகிறபோது அதிகமாகப் பேச முடியாதவர்கள் தாங்கள்தான். ஆங்கில பாராளுமன்ற விதிகளின்படி அங்கே 'ஸ்பீக்கர்' என்று சொல்வதற்குக் காரணம், மன்றத்தினுடைய நிகழ்ச்சிகளை மன்னருக்கும் மன்னர் சொல்லுகிற செய்திகளை மன்றத்திற்கும் சொல்கிற அந்த நிலையில் இருந்ததால் அவர்களை 'ஸ்பீக்கர்' என்று சொன்னார்கள். அனைவருக்கும் மத்தியிலே நடுநிலையில் பேசுகிற ஒரு வாய்ப்பினைப்பெற்றவர்கள் என்ற முறையில் ஆங்கில நாட்டின் பாராளுமன்ற முறையில் 'ஸ்பீக்கர்' என்று இங்கே சொல்லுகிறார்கள். ஆகவே இந்த மன்றத்தினுடைய தலைவராக, இந்த மன்றத்தினுடைய விதிமுறைகளை மீறாமல், இந்த மன்றத்தினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நீங்கள் சிறந்த பண்பாளராக, அந்த விதிமுறைகளை சட்டப்படி நடைமுறைப் படுத்துவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

11-10 மணி

உதாரணமாக இந்த மாமன்றத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூட நான் சொல்ல விரும்புகிறேன். சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்த மன்றத்தினுடைய தலைவராக இருந்த நேரத்தில் அன்றைக்கு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்தத் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்தார்கள். ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதாக இருந்தபோது அதை அனுமதிக்கக் கூடாது என்று ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தனக்கே உரிய திறமையுடன், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று வாதாடி, அப்படி 4 நாட்கள் இந்த மன்றத்திலே எடுத்துக்கொள்ளாத அளவுக்கு அவர் வாதாடியும் கூட, சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அதை அனுமதித்தார்கள் என்று நான் இங்கே இருக்கின்ற சபைக் குறிப்புகளிலே படித்திருக்கிறேன். ஆகவே நீங்கள் ஒரு நேரத்தில் தமிழக முதல்வர் அவர்கள் உங்களுக்கு ஆணையிட்டால் கூட உங்களுக்கு என்று படுகின்ற — விதியின்படி நியாயம் என்று எது படுகின்றதோ அந்த — தீர்ப்பினை நீங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்

[திரு. சி. ஆண்டித்தேவர்] [1991 ஜுலை 3

எதிர்க்கட்சி வரிசையிலே எண்ணிக்கை குறைவாக நாங்கள் இருந்தாலும் எங்களுக்குரிய நேரத்தினை நீங்கள் ஒதுக்கித்தர வேண்டுமென்று சொல்லுகின்றபோது ஆளும் கட்சி தரப்பு அங்கத்தினர்களை விட எங்களுக்கு அதிக உரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்க நாங்கள் விரும்பவில்லை ; ஆளும் கட்சி தரப்பினைச் சார்ந்தவர்களையும், எதிர்க் கட்சி தரப்பினைச் சார்ந்தவர்களையும் சமமாக நடத்துவீர்கள் என்று நான் உங்களிடம் இந்த மன்றத்தின் மூலமாக எதிர்ப்பார்க்கிறேன்.

அதே போன்று துணைத் தலைவர் அவர்கள் பேராசிரியராக இருந்தவர்கள். இரண்டு ஆண்டு சட்டசபை அனுபவம் பெற்றவர்கள். இந்தச் சட்டமன்றத்தை விட, பேராசிரியராக இருந்து மாணவர்களைச் சமாளிக்கின்ற அந்தப் பொறுப்பினைப் பெற்றிருந்தவர்கள். ஏனென்று சொன்னால் மாணவர்கள் செய்கின்ற அந்த விஷமத்தனத்தைக் கூட கோபம் இன்றி நடுநிலையிலே தீர்ப்புக்கூறி பல ஆண்டுக்காலம் பேராசிரியராக இருந்தவர்கள். ஆகவே இந்த மன்றத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே உணர்ச்சி வசமாக அங்கத்தினர்கள் பேசினாலும் அதைப் பொறுமையாகக் கேட்டு நல்ல தீர்ப்பினை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கும் எனது பாராட்டினைத் தெரிவித்துக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் இந்த மன்றத்தினுடைய நீண்ட பாரம்பரியத்தைக் காப்பதற்குரிய வழியில் நல்ல முறையில் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. செ. கு. தமிழரசன்

திரு. செ. கு. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக சரித்திரத்திலேயே மகத்தான ஒரு சாதனையைப் படைத்து காட்டியிருக்கிற — தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் மகத்தான சாதனையைப் படைத்துக் காட்டியிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பத்தாவது சட்டமன்றப் பேரவையில், பேரவைத் தலைவராக நீங்களும், பேரவைத்துணைத் தலைவராகப் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு இந்தியக் குடியரசுக்கட்சியின் சார்பிலே நான் பாராட்டுவதிலும், வாழ்த்துவதிலும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாமன்றம் புகழ் வாய்ந்த மாமன்றம், தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவராக விளங்கிய பெரும் தலைவர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் முதல் பேரவைத் தலைவராக விளங்கிய மாமன்றம் இந்த மாமன்றம். இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக விளங்கக்கூடிய அளவிற்கு கம்யூனல் ஜி.ஓ. என்று சொல்லப்படுகின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை முதன் முதலிலே அறிமுகப்படுத்திய மாமன்றம். இந்த மாமன்றத்தினுடைய பேரவைத் தலைவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

1991 ஜூலை 3] [திரு செ கு தமிழரசன்]

சபாநாயகர் என்றாலே ஆண்டவர் என்று தமிழிலே ஒரு பொருள் உண்டு. ஆண்டவர்கள் கூட நம்முடைய தமிழ் மண்ணிலே தமிழ் சங்கத்தினுடைய தலைவர்களாக இருந்து சபையை நடத்தியதாகத் தமிழ் நூல்களிலே கதைகள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு பாரம்பரியம் மிக்க இந்தத் தமிழ் மண்ணின் பேரவைத் தலைவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதிலே நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

11-15 மணி

நீங்கள் ஸ்பீக்கர் என்று சொல்லப்படுகிற அளவுக்கு அதிகம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாதவராக இந்த அவையிலே இருந்தாலும் கூட மக்களுடைய பிரச்சினைகளை, இந்த மக்கள் மன்றத்திலே பேசுவதை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சொல்லுகிற அளவுக்கு பல வாய்ப்புகள் பெற்று இருக்கிறீர்கள். எனவே எங்களை ஒத்த சிறிய கட்சிகளுக்கு மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்குக் கொஞ்சம் நிறைய வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் உங்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் காட்சிக்கு எளியவர்; கடும் சொல் இல்லாதவர்; கடமை வீரர்; நிறைந்த அனுபவம் உள்ளவர். அவர் இந்தப் பேரவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதிலே உண்மையாகவே நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள், பேராசிரியராகவும் இந்த மன்றத்திலே அனுபவம் உள்ளவராகவும் நீண்ட காலம் இருந்தவர். எனவே அவரையும் எங்களுடைய இயக்கத்தின் சார்பில் நாங்கள் பாராட்டுவதிலே மகிழ்ச்சி அடைகிறோம். நீங்கள் இருவருமே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிக்குப் பெருமை சேர்க்கிற வகையில் 'சேடப்பட்டி முத்தையா' என்றும், 'மருங்காபுரி பொன்னுசாமி' என்றும் இன்றைக்கு மக்கள் மத்தியில் அழைக்கப்படுகிறீர்கள். நீங்கள் இருவரும் அலங்கரிக்கிற இந்த சட்டப்பேரவை இந்தியாவுக்கே முன் உதாரணமாக இருக்கிற அளவுக்கு நீங்கள் பொறுப்பு வகிக்கிற இந்த பதவிக்கும் பெருமை சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எங்கள் கட்சியின் சார்பிலே மீண்டும் வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. நா. சா. பழனிசாமி;

திரு நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய தலைவராக தாங்கள் இளைய வயதிலேயே பொறுப்பு ஏற்று இருக்கி

றீர்கள். இந்தப் பேரவையினுடைய தற்காலிகத் தலைவராக இருந்து உங்களுக்கு வாழ்த்துச் சொன்ன பேரவை தற்காலிகத் தலைவர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் காலையிலே ஒரு திருக்குறளைக் குறிப்பிடுகிற போது யாருடைய பொறுப்பிலே எந்தக் காரியத்தை விட வேண்டுமோ அந்தக் காரியத்தை அவர்கள் பொறுப்பிலே விட வேண்டுமென்ற பொருள்படுகின்ற ஒரு குறளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்போதே உங்களது தகுதி என்பது நிர்ணயிக்கப்பட்டு விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தப் பத்தாவது பேரவைக்கு ஒரு தனியான சிறப்பு இருக்கிறது.

'' பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்

பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம் ''

(மேசையைத் தட்டும் ஒலி) என்ற புரட்சிக் கவி பாரதியினுடைய புதுமைப் பெண்ணாக, தமிழக முதலமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திலே பொறுப்பு ஏற்று இருக்கின்ற அந்தப் புரட்சித் தலைவியினுடைய அமைச்சரவை இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவைக்கு நீங்கள் தலைமைப் பொறுப்பு ஏற்று இருக்கிறீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முத்தான ஒரு உறுப்பினரை இந்தச் சபாநாயகர் பொறுப்புக்குத் தியாகம் செய்து கொடுத்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபாநாயகர் பொறுப்பிலே சட்டப் பேரவைத் தலைவர் பொறுப்பிலே இருக்கின்ற நீங்கள் நிச்சயமாக இந்த அவையினுடைய, கண்ணியத்தையும், மரபையும் காப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாங்கள் கிராமப்பகுதிகளிலேயிருந்து விவசாயிகளுடைய குரலைப் பிரதிபலிக்க வந்து இருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய தேர்தல் வாக்குறுதியிலேயே கடனிலே பிறந்து கடனிலே வளர்ந்து கடனிலே மடிகின்ற உழவர் சமுதாயத்தினுடைய கடன் தொல்லை தீர்க்கப்படும் என்ற அந்த வாக்குறுதியைத் தந்தார்கள். அந்த உரிமைக் குரலைச் சட்டமன்றத்திலே ஒலிப்பதற்காக எங்களுக்கு சந்தர்ப்பத்தையும் கொடுத்து இருக்கிறார்கள். அப்படி அந்த உரிமைக் குரலை இந்தச் சட்டமன்றத்திலே ஒலிக்கின்ற நேரத்தில் சேடபட்டியில் பிறந்த—பட்டி தொட்டிகளில்

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 ஜூலை 3

பிறந்த பாமர மக்களுடைய குரலை ஒலிக்க வந்த எங்களுக்கு ஒரு பட்டியிலே பிறந்த முத்தையா அவர்கள் இந்த அவைத் தலைவராக அமர்ந்து (கையொலி) இந்த ஏழை எளிய மக்களுடைய, பாமர மக்களுடைய உரிமைக் குரலை ஒலிப்பதற்கான ஒரு வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்பதிலே எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

11-20 மணி

அவர் குறைந்த வயதிலே இந்த பொறுப்பை ஏற்று இருக்கிறார். அவர் முதுகலைப் பட்டம் பெற்றவர். எனவே முதுகலைப்பட்டம் பெற்ற ஒருவர், வயது குறைவால் தகுதியை இழந்து விட முடியாது. குறைந்த வயதும் நிறைந்த பண்பும் கொண்டவராக சேடபட்டி முத்தையா அவர்கள் இந்த அவைத் தலைவராக, சிறப்பாகப் பணியாற்றுவார்கள். அதைப்போலவே பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் பேராசிரியராகப் பல ஆண்டுகள் இருந்தவர்கள்; அவர்கள் மாணவர்களை எப்படியெல்லாம் அவையடக்கம் செய்து, அவர்கள் சொல்கின்ற கருத்துக்களைக் கேட்பதற்காக மாணவர்களுக்கு எப்படி ஒரு படிப்பினை சொல்லிக்கொடுத்தார்களோ, அதைப்போல இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களில் பலர் மாணவர்கள்தான், நாங்கள் சட்டமன்றத்திற்கு வந்து பேசிப் பழக்கப்படாதவர்கள், மாணவப் பருவத்திலே இருப்பவர்கள், கன்னி முயற்சியாக இங்கே வந்து பேசுகின்றவர்கள், அப்படிப் பேசுகின்ற எங்களது சொற்களிலே சற்றுக் குறையிருந்தாலும்கூட அதையும் பொறுத்து இந்த அவையை வழி நடத்திச் செல்வதற்குப் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் துணை நிற்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, இந்தப் பேரவையினுடைய தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்ற சேடபட்டி முத்தையா அவர்களும், துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்ற பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் இந்தப் பத்தாவது சட்டப்பேரவையைக் கண்ணியத்தோடு வழிநடத்தி, அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரம் வானளாவியதாக இருந்தாலும்கூட எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் அவர்கள் வழிவிட்டு, எங்கள் குரலையும் புரட்சித் தலைவி அரசிடம் எடுத்துச் சொல்லி எங்களது கருத்துக்களை அவர்களை ஏற்கவைத்து எங்களது கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவார் என்று நம்பி, அவர்கள் சிறப்பாகப் பணியாற்ற, இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பாக வாழ்த்தி, அமைகிறேன். வணக்கம்.

## பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்

[1991 ஜுலை 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற போது சில உறுப்பினர்கள் கையொலி எழுப்புகிறீர்கள். அவ்வாறு கையொலி எழுப்புவது மரபு அல்ல. உங்களுடைய இருக்கைக்கு முன்னர் இருக்கிற மேசையை வேண்டுமானால் தட்டலாமே தவிர, கையொலி எழுப்பக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து எஸ். வி. சண்முகம்.

திரு எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களை இந்தப் பேரவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுத்ததிலிருந்தே எதிர்காலத்தில், இந்தத் தமிழகத்தில் எத்தகைய நியாயமான நடவடிக்கைகள் நடைபெறப்போகின்றன என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். உங்களை சட்டமன்றத்திலே பார்த்தவர்கள் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே பார்த்தவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திற்குப் புதியவர்களாக வந்திருக்கின்ற என்னைப் போன்றவர்கள் உங்களை மக்கள் மன்றத்திலே பார்த்திருக்கிறோம். நீங்கள் மிகச் சிறந்த அரசியல் தலைவராக, பிரச்சினைகளை நெளிவு சுளிவுகளோடு அணுகக்கூடிய ஒரு தலைவராக, கடந்த காலங்களில் வாழ்ந்து வந்திருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்வதெனில் நீங்கள் நல்ல குடிமகனாக வளர்ந்து மரபோடு இன்றைக்கு அருமையான பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

எங்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சொல்லும்போதுகூட கடந்த காலங்களில் சபாநாயகர்கள் சிறை வைக்கப்பட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் மிகப் பழைய விஷயத்தைச் சொன்னார்கள். எங்களைப் போன்ற இளையவர்களுக்குத் தெரிந்த விஷயம் சபாநாயகர்களாலேயும் சிலர் சிறை வைக்கப்பட்டார்கள். அந்த மாதிரியான சம்பவங்கள் உங்களுக்கு வராது என்பது எங்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும், உங்களையும் யாரும் சிறை வைக்க மாட்டார்கள். நீங்களும் யாரையும் சிறை வைக்கமாட்டீர்கள் என்பது தெரியும். உங்களிடம் ஸ்டியரிங்கும் இருக்கிறது; பிரேக்கும் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே இந்தச் சட்டமன்றம் முன் எப்போதும் இல்லாத ஒரு சட்ட மன்றமாகத் திகழப் போகிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அற்புதமாக முடிவு செய்து இருக்கிறார்கள், மற்ற

எந்தச் சபாநாயகருக்கும் இல்லாத ஒரு அற்புதமான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்து இருக்கிறது. நீங்கள் ஒருவர்தான் ஏகோபித்த தமிழக மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்ற ஒரு சட்டமன்ற சபாநாயகர் என்பதில் நாங்கள் பெருமை அடைகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய சபாநாயகருடைய சீரிய தலைமையின் கீழ் இந்த மன்றத்திலே பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

11.25 மணி

இப்பொழுது கூட சட்டத்தை விளக்கிச் சொன்னீர்கள். கை தட்ட வேண்டாம், மேசையிலே தட்டுங்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் மிக்க எச்சரிக்கையாக இருக்கிறீர்கள். வந்திருக்கின்ற நாங்கள் கண்டிப்பாக மைக்கைப் பிடுங்க மாட்டோம். மைக்கைப் பிடுங்குகின்ற சட்டமன்ற உறுப்பினர் களையும், அத்து மீறல்களையும் செய்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் தமிழ்நாட்டு மக்கள் இப்பொழுது அனுமதிக்கவில்லை என்பது போல, எப்பொழுதும் அனுமதிக்க மாட்டார்கள்.

இந்தச் சட்டமன்றத்திடம் தமிழ்நாட்டு மக்கள் மிக அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு முதலமைச்சர் அவர்கள் அமைந்திருக்கிறார்கள் என்பதை, உங்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் முதலமைச்சர் அவர்கள் முதல் மணியாக அடித்திருக்கிறார்கள். நாங்கள் உங்களோடு சேர்ந்து நிற்போம்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்த வரையில் அது யார் என்பது அல்ல; உண்மையான எதிர்க் கட்சியாக அது இயங்குமேயானால், அது எதிரிக் கட்சியாக இல்லாமல் இருக்குமேயானால் நம்முடைய சபாநாயகர் அவர்கள் அதனை மதிக்கக் கூடிய மாண்பு உள்ளவர்கள் என்பதை அவர்கள் மாவட்டத்திலே அவர்களைப் போலவே அவரோடு இணை நின்ற ஒரு மாவட்டச் செயலாளராகப் பணியாற்றியவன் என்ற முறையிலே, அவரைப் புரிந்து கொண்டவன் என்ற முறையிலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நல்ல சபாநாயகரைத் தந்த மாண்புமிகு முதல் அமைச்சருக்கும் இத்தகைய அற்புதமான சட்டமன்றத்தை அமைத்துத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கும் ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஏஸ். வி. சண்முகம்] [1991 ஜூலை 3

இன்னொன்றுக்கும் நாங்கள் பெருமைப்படுகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சபாநாயகர் அமரர் இராஜீவ் காந்தி அவர்களுடைய அருமை நண்பர் என்பதிலேயும் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

சபாநாயகருக்கும், அவரோடு தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற துணை சபாநாயகருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த பண்புகளையும், சீரிய குண நலன்களையும், நல்ல செயல் திறனையும் கொண்டுள்ள உங்களை இப்பேரவையின் மாண்புமிகு தலைவராகவும், பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களைப் பேரவையின் துணைத் தலைவராகவும் இப்பேரவை ஒருமுகமாகத் தேர்ந்தெடுத்துள்ளது. சுமுகமான முறையில் மாண்புமிகு தலைவர், துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட உதவிய பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை ஆட்சிக் கட்சியின் சார்பிலும், அரசின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களையும், துணைத் தலைவரையும் பாராட்டி அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் பேசியுள்ளனர். இந்த அவையின் உயர் நிலையையும், அவைத் தலைவராகத் திகழ்ந்த பெருமக்களின் சிறப்புக்களையும் பலப்பட எடுத்துக் கூறினார்கள். கண்ணியம் மிக்க இந்த அவை, இந்தியத் திருநாட்டுக்கே எடுத்துக்காட்டான அவையாகத் திகழ்ந்துள்ளது என்பதை நாம் அறிவோம். இப்பேர்ப்பட்ட சிறப்புக்குரிய இந்த அவையின் வரலாற்றில் சில கால கட்டங்களில் கரும் புள்ளிகள் விழுந்த நிகழ்ச்சிகள் நடந்து விட்டதையும், எவரும் மறந்திருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

தமிழகச் சட்டமன்ற வரலாற்றின் வடுக்களாகக் காட்சி தரும் அத்தகைய நிகழ்ச்சிகள் இனி என்றைக்கும் நிகழா வண்ணம் இந்த அவையின் பெருமையை அவைத் தலைவரவர்களும், துணைத் தலைவரவர்களும் பேணிக்காத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்வேன்.

1991 ஜூலை 3] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

சீர்மிக்க இந்த அவையின் இழந்த பழம் புகழ் மீள வேண்டும் என்பது தான் இந்த அவையில் எனது முதலாவது வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான பக்குவமும், பயிற்சியும் மாண்புமிகு பேரவைத் தலைவர் பெற்றிருக்கிறீர்கள். இதே அவையின் சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றி இருக்கிறீர்கள். அது மட்டுமல்லாது, நாடாளுமன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிறீர்கள். நாடாளுமன்ற மக்களவை வரலாற்றில் ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அக்கால கட்டங்களிலெல்லாம் நீங்கள் பெற்று இருக்கும் அனுபவம் இப்பேரவையை நல்ல முறையில் நடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன்.

மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்கத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு பொதுத் தொண்டு ஆற்றி வந்துள்ளீர்கள். கல்லூரி நாட்களில் 1965 இல் இந்தி எதிர்ப்புப் போரிலும், அதன் பின்னர் 1972 இல் புரட்சித் தலைவர் தலைமையில் நடந்த புனிதப் போரிலும் ஈடுபாடு கொண்டு இயக்கப் பணி ஆற்றி வந்துள்ள உங்களை இன்று வரை என்ன பணி கொடுக்கப்பட்டாலும் முகம் சுளிக்காது செய்து முடிப்பவராகவும், எந்த இன்னல் வந்தாலும், கொண்ட இலட்சியத்தின் மீது பற்று துளியும் குறையாது தொண்டாற்றி வருபவருமாகவே கண்டு வந்துள்ளேன். இத்தகைய சிறப்புக்குரிய ஒரு கட்சித் தொண்டராய்ப் பணியாற்றி வந்துள்ள உங்களை, கட்சி சார்புகளுக்கு அப்பாற்பட்டு, நடுநிலையோடு பணியாற்ற வேண்டிய பொறுப்பில் அமர்த்தியுள்ளோம்.

11-30 மணி

இயற்கையாக உங்களிடம் அமைந்துள்ள பொறுமையும், பெருந்தன்மையும், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினைச் சிறப்புறச் செய்து முடிக்க உதவும் எனக் கருதுகிறேன். அதன் மூலம் இந்த அவையின் மதிப்பையும், கௌரவத்தையும் நாங்களெல்லாம் பெருமைப்படும் அளவுக்கு உயர்த்துவீர்கள் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. இந்தச் சட்டமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சம வாய்ப்புப் பெறுவார்கள் எனக் கருதுகிறேன். ஜனநாயக அமைப்பில், அவ்வாறு பெற வேண்டும் என்பது தான், வரவேற்கத் தக்க நெறிமுறையாகும். அதற்காக, எங்களது பரிபூரண ஒத்துழைப்பு அவைத் தலைவருக்குக் கிடைக்கும் என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 ஜூலை 3

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ், ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து கரங்கள் நீளக் கூடாது; கரங்கள் நீளாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தங்களுக்குக் கோரிக்கை விடுத்தார். என்னால் உறுதியாகக் கூற முடியும்; ஆளுங்கட்சியில், இன்று சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளவர்கள், பண்புள்ளவர்கள், கண்ணியம் காக்கத் தெரிந்தவர்கள், மெத்தப் படித்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக ஆளுங்கட்சியிலிருந்து எந்தக் கரமும் நீளாது என்ற உத்தரவாதத்தை என்னால் தர முடியும் (மேசையைத் தட்டும் ஒலி).

அதற்குப் பின்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள், தாங்கள் எந்தப் பக்கமும் சாய்ந்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். கடந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல் சூறாவளிகளில், இக்கட்டான சூழ்நிலைகளில் நடுநிலை தவறி, தடுமாறி, நிதானமிழந்து, புயற்காற்றால் அடிக்கப்பட்டு, நிலைதடுமாறி விழுந்தவர்கள், எப்படியெல்லாமோ சமாளித்து, இன்று உருக்குலைந்து, கூனிக் குறுகி, நொண்டிக் கொண்டு வந்திருக்கிற இந்த நேரத்தில்—நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்—எந்தக் கால கட்டத்திலும், தாங்கள் அப்படிச் செய்யவில்லை; நிமிர்ந்தே நின்றிருக்கிறீர்கள். எத்தகைய இன்னல் வந்தாலும், நிமிர்ந்து நிற்கக் கூடியவர்கள்தான் தாங்கள் என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள், முதலமைச்சரே ஆணையிட்டால்கூட, தாங்கள் அடிபணிந்து விடக் கூடாது என்று கூறினார்கள். சபாநாயகர் பொறுப்பு, எத்தகைய பொறுப்பு என்பதை நான் அறிவேன். சபாநாயகருக்கு, முதலமைச்சர் எந்த வகையிலும் ஆணையிட முடியாது என்ற வரம்பையும் நான் அறிவேன். அதற்குட்பட்டுத்தான் நடந்து கொள்வேன் என்ற உத்தரவாதத்தையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது, சகோதரர் முத்தையாவைத் தியாகம் செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார். அது உண்மைதான். என்னைப் பொறுத்தவரையில், அது மிகவும் பெரிய தியாகம் தான். ஆனால், தங்களைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், இந்த அவையின் இழந்த கண்ணியமும், இழந்த மதிப்பும் மீண்டும் மீட்கப்பட முடியுமானால், அந்தத் தியாகத்தை மனநிறைவோடு செய்கிறோம் என்பதைக் குறிப்பிட

ALONE TRIUMPHS

விரும்புகிறேன். எத்தகைய பிரச்சினை வந்தாலும், சிலர் அத்துமீறிச் செயல்பட்டாலும் இன்னும் சிலர், 'வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது' போல பிரச்சினைகளைக் கிளப்ப முயன்றாலும் எத்தகைய பிரச்சினைகளையும் தங்களால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவைத் தலைவரின் அதிகாரம் வானளாவியது ; அதுவும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அதிகாரம் வானளாவியதற்கும் அப்பாற்பட்ட ஒன்று என்று ஒரு தவறான கருத்து இந்த மன்றத்தில் ஆதிக்கம் செலுத்தியிருந்ததை அனைவரும் அறிவோம். ஜனநாயக இந்தியாவில், நமது அரசியல் சட்டத்தில், எவருக்கும் கட்டுப்பாடற்ற வானளாவிய அதிகாரம் வழங்கப்படவில்லை. ஜனநாயகம் என்பதே தனிநபர் சர்வாதிகாரத்திற்கு எதிரானது என்பதை உணர்ந்தாவது, அத்தகைய தவறான கருத்துக்களைத் தவிர்த்திருக்க வேண்டும். பாராளுமன்ற நெறி முறைகளின்படியும், இந்த அவையின் விதிமுறைகளுக்கு உட்பட்டும்தான் அனைவரது அதிகாரமும், உரிமையும் உள்ளது. எனவே, சம உரிமையும், சம அதிகாரமும் பெற்றுள்ள இந்த அவையின் அனைத்து உறுப்பினர்களும் ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி எனும் பாகுபாடின்றிப் பணியாற்றி, இந்த அவையின் பெருமையைக் காப்பதோடு, நிறைந்த எதிர்பார்ப்புகளோடு, நம்மை இந்த மன்றத்திற்கு அனுப்பியுள்ள நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுவோம் ; நல்ல திட்டங்களையும், சட்டங்களையும் இந்த அவையின் மூலம் நிறைவேற்றுவோம்.

11—35 மணி

சமுதாயத்தில் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, நலிவுற்ற மக்களின் நன்மைக்காக இளமைக்காலம் முதற்கொண்டு பொறுப்போடு பணியாற்றி வந்துள்ள தாங்கள் இப்பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள இத்தருணத்தில் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களும், தமிழகத்தைத் தலைநிமிரச் செய்திடும் தொழில் வளர்ச்சிப் பணிகளும் இம்மன்றத்தின் மூலம் தங்குதடையின்றி நடைபெற எல்லா வகையிலும் இம்மன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அவ்வகையில் அயராது பணியாற்றக் காத்துக் கொண்டுள்ள தங்களைப் பெரிதும் பாராட்டி என் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் துணையாகப் பணியாற்றிட, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் திரு. பொன்னுசாமி அவர்கள் சிறந்த பொதுநலத் தொண்டர் ஆவார். இச்சட்ட

மன்றத்தில் சென்றமுறை பல்வேறு சங்கடங்களுக்கு இடையிலே சிறப்புறப் பணிபுரிந்தவர் அவர். இங்கே எல்லோரும் பாராட்டியதற்கேற்ப அவரும் தனது பணிகளைச் செம்மையாகச் செய்வார் என்ற நம்பிக்கையோடு அவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் முன்னேற்றம், தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழ்நாட்டின் தலைநிமிர்ந்த தன்மை—இந்த இலக்கு நோக்கி இந்த அவை பீடு நடை பயின்றிட மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மீண்டும், மீண்டும் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராட்டுரைகளுக்கு நன்றி கூறி, பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் இப்போது உரையாற்றுவார்கள்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் துணைத் தலைவராகப் பணியாற்றுகிற நல்லதொரு வாய்ப்பை எனக்கு அளித்திருக்கிற, நான் வணங்குகிற இதயதெய்வம், உலக வரலாற்றிலே நிலைபெறப் போகிற சட்டமன்றத்தை அமைத்துக் காட்டி இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுரைகள் வழங்கி இருக்கிற மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரம்பரியம் மிக்க, பெருமை மிக்க இந்தப் பேரவையின் துணைத் தலைவராகப் பணியாற்றுகிற வாய்ப்பினை ஏகமனதாக அளித்துள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையின் மாண்பையும், மரபையும், பெருமையையும் புகழையும் இதற்கு முன்னாலே இந்தப் பேரவையில் பணியாற்றியவர்களுடைய பெருமையையும் நான் கற்றும் அறிந்திருக்கிறேன் ; கேள்விப்பட்டும் இருக்கிறேன் என்ற முறையில் நிச்சயமாக இந்த அவையினுடைய மாண்பையும், மரபையும் காப்பேன். இந்த அவையின் பெருமைக்குச் சற்றும் களங்கம் ஏற்படாத வகையில் என்னுடைய செயல்முறைகளை அமைத்துக் கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய செயல்பாடுகளுக்குத் துணையாக நின்று, பொறுப்புணர்வோடும் கடமை

*1991 ஜூலை 3]* *[பேரவைத் துணைத் தலைவர்]*

உணர்வோடும் பணியாற்றுவேன் என்ற உறுதியை அளித்து இந்த வாய்ப்பை அளித்த உங்கள் அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் மீண்டும் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய மறைவுக்குப் பிறகு எங்கள் கண்ணுக்கு எதிரே தெரிகின்ற கண்கண்ட தெய்வமான மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு அவையின் அனைத்து உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய பணிவுகலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மூன்றாவது முறையாக நான் இந்த அவையினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இங்கே அந்தக் கடைசியில், திரு. தமிழரசன் அவர்கள் உட்கார்ந்துள்ள இடத்தில் நான் உட்கார்ந்தேன். அப்படி உட்கார்ந்து இருந்த என்னை இந்த அவைக்குள்ளே நுழைந்த சில வன்முறையாளர்களும், காலித்தனம் செய்யவேண்டுமென்று ஏவிவிடப்பட்டவர்களும் அடித்துத் துரத்தி அந்தப்புறமாக ஓடச்செய்து துரத்தியதற்குப் பிறகு, நான்காவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு வருகிறபோது, அந்த இடத்திலே அமர்ந்திருந்த என்னை இந்த உயர்ந்த இடத்திலே அமரச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய உயிருள்ள வரையிலேயும், நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*11–40 மணி*

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய வேண்டுகோளாக எனக்குத் தெரிவித்தார்கள். இந்த அவையினுடைய வளைந்த செங்கோலை நிமிர்த்துகின்ற மதுரைப் பாண்டியனாக நீங்கள் இருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை எடுத்து வைத்தார்கள். அந்தச் செங்கோல் வளைந்த நேரத்தில் வளைந்த முதுகோடு, இங்கே அமர்ந்திருக்கின்ற சில உறுப்பினர்கள் தயவோடுதான் உயிர் பிழைத்துச் செல்ல வேண்டுமென்கின்ற அளவுக்கு ஆளாக்கப்பட்டவன் என்ற முறையிலேயும், அந்த நிலையிலே துரத்தப்பட்ட என்னை, இந்த உயர்ந்த இடத்திலே அமர்த்தியிருக்கின்றபோது நீங்கள் சொன்னதுபோல, அந்த வளைந்த செங்கோலை நிமிர்த்துவதற்கு உரிய அந்தப் பணியில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வேன். அந்தப் பணிக்காகத்தான் இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்களும் நீங்களும் என்னை அமர்த்தியிருக்கிறீர்கள் என்கின்ற உணர்வோடு நான் பணியாற்றுவேன் என்கின்ற உறுதியை நான் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1991 ஜூலை 3

இந்த அவையினுடைய பெருமையை, அவைத் தலைவர்களாக இருந்த பெருமக்களுடைய சிறப்பை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், பாராட்டிப் பேசிய அனைவரும் இங்கே விரிவாக எடுத்துத் தெரிவித்திருக்கிறீர்கள். எவ்வளவு சிறப்புக்குரிய பெருமக்கள் இந்த அவைக்குத் தலைமை தாங்கி இந்த இருக்கையிலே அமர்ந்திருந்து நடத்தி இருக்கின்றார்கள் என்பதை நான் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஒரு சம்பவத்தின் மூலம் அறிய முடிந்தது. மிகச் சிக்கலான ஒரு பிரச்சினை நாடாளுமன்றத்திலே எழுந்த போது, நாடாளுமன்ற அவைத் தலைவர் திரு. ரபி ரே அவர்கள் இதே சட்டமன்றத்திலே முதல் சபாநாயகராக இருந்த பெருந்தகை சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அளித்த தீர்ப்பை மேற்கோள் காட்டி, பாராளுமன்றத்திலே தன்னுடைய தீர்ப்பும் அந்த சிவசண்முகம் பிள்ளை அளித்த தீர்ப்பாகத்தான் இருக்க வேண்டும் என்று அளித்த நேரத்தில், அன்றைக்கு நான் பெருமையோடு எண்ணிப்பார்த்தேன், அந்தப் பெருமைக் குரியவர் அமர்ந்திருந்த இடத்தில் என்னை அமர்த்தியிருக் கின்றீர்கள் என்கின்றபோது என்னுடைய கடமையும் பொறுப் பும் எந்த அளவுக்கு, நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு இருக்கவேண்டும் என்பதை மனதிலே நினைத்துப் பார்த்து என்னுடைய பணிகளை ஆற்றுவேன் என்பதை மட்டும் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவைத் தலைவருடைய இருக்கையில் அந்தப் பெருந்தகை சிவசண்முகம் பிள்ளை அவர்களும், அதற்குப் பின்னர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களாலேயே பாராட்டப்பட்ட திரு. யு. கிருஷ்ணா ராவ் அவர்களும், இன்றைக்கும் பாராட்டுக்குரியவர்களாகத் திகழ்கின்ற பெருந் தகை திரு. செல்லபாண்டியன் அவர்களும், நல்ல தமிழை, நாட்டுத் தமிழை இந்த அவையில் நடமாடச் செய்த திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களும், தன்னுடைய மணிப்பிர வாளத் தமிழால் இந்த அவையையும், நாட்டையும் சொக்க வைத்த மறைந்த எங்கள் அண்ணன் மதி அவர்களும், அதற் குப் பின்னர் தன்னுடைய யதார்த்தமான நடைமுறையால், இந்த அவையின் அனைத்துத்தரப்பு உறுப்பினர்களின் பாராட்டுக்கும் உரியவராகத் திகழ்ந்த இன்றைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. இராசாராம் அவர்களும் இருந்து பல்வேறு எடுத்துக்காட்டான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்து இருக்கிறார்கள். அவர்கள் காட்டிய அந்த நெறிமுறை கள் எல்லாம் நான் இன்றைக்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளாக இருக்கத் தக்க வகையில், இந்தப் பேரவைத் தலைவர் பணியை ஆற்றுவேன் என்ற உறுதியையும்

*1991 ஜூலை 3]* *[பேரவைத் தலைவர்]*

உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே இருபுறமும் அழைத்து வந்து அமரச் செய்த நிகழ்ச்சியை பழைய காலச் சபாநாயகர்களை இழுத்து வந்தும், வலுக்கட்டாயமாகவும் அமர்த்தி வைத்த நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் கூறினார்கள். அந்தக் காலத்திலே, மன்னர் ஆட்சி திகழ்ந்த காலங்களில் சபாநாயகர்களுக்கு அப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு ''குடி தழீஇக் கோலோச்சுகிற'' குணநலமிக்க புரட்சித் தலைவி ஆளுகிற (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியில் எனக்கு அப்படிப்பட்ட எந்தச் சங்கடமும் இருக்காது. நீங்கள் இருவரும் என்னை அழைத்து வந்தபொழுதே நான் நினைத்துக் கொண்டேன். இருவருடைய உறுதுணையும் எனக்கு இருக்கிறது. அதிலும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தன்னுடைய நீண்ட பெரும் அனுபவத்தையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய நீண்ட பெரும் அரசியல் அனுபவத்தையும் எனக்குத் தருவார்கள் என்கிற நம்பிக்கையோடுதான், மிகுந்த நம்பிக்கையோடு எந்தவிதமான பயத்துக்கும் ஆளாகாமல் வந்து அமர்ந்திருக்கிறேன் என்கிற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**11-45 மணி**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்ததைப் போல, இந்த அவையில் ஒரு தவறான முன் உதாரணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இன்றைக்குச் சுட்டிக்காட்டியாக வேண்டும். இந்த அவையினுடைய தலைவருக்கு வானளாவிய அதிகாரம் உண்டு என்கிற ஒரு தவறான கருத்தை இங்கே பரவச் செய்து, நாடாளுமன்றத்தில் இருந்த போதுகூட பல்வேறு முதுபெரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேலியாக ''The sky is the limit'' என்று சொன்ன அந்த வாக்கியத்தைத் திரும்ப திரும்பக் கேலியாகச் சொல்கிற அளவுக்கு, கேலிப் பொருளாக அது கருதப்பட்ட சூழ்நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து, இந்த அவைத் தலைவருடைய வரம்பு என்பது, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த விதிமுறைப் புத்தகத்துக்கு உட்பட்டதுதான். இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் இந்த அவையும் நடைபெறும், இந்த விதி முறைகளுடைய இரண்டு அட்டைகளுக்கும் அப்பாற்பட்டு எந்தக் காரியமும் இங்கே நடைபெற அனுமதிக்க மாட்டேன், நானும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டேன் என்கிற உறுதியையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவை, தமிழ்நாட்டு மக்களாலே இன்னொரு களங்கத்திற்கு ஆளாக்கப்பட்டு விட்டது. இது ஒரு துச்சாதனன் அவை என்கிற அளவுக்கு ஒரு கருத்து தமிழ்நாட்டு மக்கள் மனதில் குடியேறி விட்ட அந்தக் கொடிய செயலை வீழ்த்துகிற வகையிலேதான் இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். துச்சாதனன் சபையாகத் திகழ்ந்த இந்தச் சபை எதிர்காலத்தில் ''தர்மதேவதை கோலோச்சுகிற சபை'' என்கிற நிலையை (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படுத்திக் காட்டுகிற வகையிலேயும் என்னுடைய செயல்பாடுகள் இருக்கும். இங்கே நம்முடைய கண்ணுக்கு எதிரிலே படங்களாகக் காட்சி தருகிற தமிழகத்துப் பெருமக்கள் நமக்குச் சுட்டிக் காட்டிச் சென்றிருக்கிற நெறிமுறைகள் அத்தனையும் பாடங்களாக இருக்கத்தக்க வகையில், அந்தப் பெருமக்களுடைய உருவங்களைப் பார்க்கிறபோதே அவர்கள் நமக்குச் சுட்டிக் காட்டிச் சென்றிருக்கிற நெறிமுறைகளையும் இந்த அவையில் நடைமுறைப்படுத்துகிற பேரவைத் தலைவனாகத் தான் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்போடும் பணியாற்றுவேன் என்கிற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பேரவை உறுப்பினர்கள் அனைவரும், எதிர்க்கட்சி என்கிற காரணத்திற்காக, எதிர்க்கட்சிகள் பலமற்று இருக்கிறோம் என்கிற காரணத்திற்காக, தனிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்கிற காரணத்திற்காக, நாங்கள் புறக்கணித்து வைக்கப்படுகிற நிலைமை இருந்துவிடக் கூடாது என்கிற வேண்டுகோளையும் அவர்கள் வைத்தார்கள். பேரவைத் தலைவராக இந்த நாற்காலியிலே அமர்ந்த உடனேயே இந்த அவையிலே இன்றைக்கு உறுப்பினர்களாக இருக்கக்கூடிய 230 பேரையும், இன்னும் சில காலங்களில் உறுப்பினர்களாக வர இருக்கிற எண்ணிக்கையையும் சேர்த்து வருகிற 234 பேர்களும் சம உரிமையும், சம வாய்ப்பும் பெறுகிறவர்கள் என்று கருதக்கூடிய பேரவைத் தலைவராகத்தான் திகழ்வேன். யாருக்கேனும் தனிப்பட்ட உறுப்பினருக்கு தனிப்பட்ட சலுகைகள், மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த அந்தஸ்து என்கிற அளவுக்கு எதிர்பார்ப்புகளை அருள்கூர்ந்து எந்த உறுப்பினர்களும், இந்த அவையில் என்னை நெருக்கடிக்கு ஆளாக்கி எடுத்துக் கொண்டு விடக்கூடாது என்கிற வேண்டுகோளை மட்டும் தான் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்து, இந்த அவையினுடைய பேரவைத் தலைவர் என்கிற பணியிலே இருக்கிறபோது நீங்கள் அனைவரும் சம வாய்ப்பையும், சம உரிமையையும் பெறுகிறவர்கள் என்பதை நிலை நாட்டு

கிற வகையில் நான் பணியாற்றுவேன் என்கிற உறுதியை உங்களுக்குத் தெரிவித்து, அந்தவகையில் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் எனக்கு இருந்திட வேண்டும். அதைப்போல இந்த அவையினுடைய ஓர் அங்கமாகத் திகழ்கிற பத்திரிகையாளர்களுடைய ஒத்துழைப்பும் இருந்திட வேண்டும் என்கிற வேண்டுகோளையும் தெரிவித்து, என்னை இந்த மிக உயர்ந்த இடத்தில் அமர்த்தியிருக்கிற மாண்புமிகு, எங்களை எல்லாம் வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் உங்கள் அனைவருக்கும், மீண்டும், மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன். அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

11-50 மணி

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வரப் பெறின், அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப் பெறும். விடைகள் வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஆகுமெனக் கருதுகிறேன். எனவே 5—7—1991 ஆம் நாள் முதல் சில நாட்களுக்கு ''வினாக்கள்-விடைகள்'' நேரம் இருக்காது என்பதை அறிவிக்கின்றேன்.

ஏற்கெனவே அறிவித்தபடி, நாளை, 4—7—1991 காலை 11 மணிக்குப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 5—7—1991 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 11-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—எதுவுமில்லை.

கிற வகையில் நான் பணியாற்றுவேன் என்கிற உறுதியை உங்களுக்குத் தெரிவித்து, அந்தவகையில் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் எனக்கு இருந்திட வேண்டும். அதைப்போல இந்த அவையினுடைய ஓர் அங்கமாகத் திகழ்கிற பத்திரிகையாளர்களுடைய ஒத்துழைப்பும் இருந்திட வேண்டும் என்கிற வேண்டுகோளையும் தெரிவித்து, என்னை இந்த மிக உயர்ந்த இடத்தில் அமர்த்தியிருக்கிற மாண்புமிகு, எங்களை எல்லாம் வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் உங்கள் அனைவருக்கும், மீண்டும், மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி அமைகிறேன். அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

11-50 மணி

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வரப் பெறின், அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப் பெறும். விடைகள் வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஆகுமெனக் கருதுகிறேன். எனவே 5—7—1991 ஆம் நாள் முதல் சில நாட்களுக்கு ''வினாக்கள்-விடைகள்'' நேரம் இருக்காது என்பதை அறிவிக்கின்றேன்.

ஏற்கெனவே அறிவித்தபடி, நாளை, 4—7—1991 காலை 11 மணிக்குப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 5—7—1991 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 11-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—எதுவுமில்லை.